190

# ஜகன்மோகினி

ஆசிரியை
வை. மு. கோதைநாயகி அம்மாள்



## சாந்தகுமாரி

(தொடர்ச்சி)


10. கொலைக்கு மஞ்சாக் கொடிய அரக்கன்.
11. திருட்டு நெஞ்சின் தவிப்பு—
திகட்டா அன்பின் இனிப்பு.
12. குழம்பிய குடும்பம்—
கொந்தளிக்கும் பாசம்.
13. சதிகாரச் சூழ்ச்சிகள்—
அதிசயப் பிரவேசம்.

இதர முக்கிய அம்சங்கள்.

வனிதா விலாசம் ... "சூடாமணி"
டாக்கி விமர்சனம் ... "வத்ஸ குமாரி"
கவிதா மண்டலம் ... திரு. ராகவாசாரியார்
மெரினா பேச்சு ... வழிப்போக்கன்
உதிர்ந்த மணிகள் ... தேர்தல் முடிவுகள்

முதலியன


JL
2211, N22 JM
N37·143.
183000

1937 சாந்தகுமாரி அணா 2

கோலாகலத்துடன் வருகிருள்

# "லக்ஷிமி"

எதிர்கொண்டு அழையுங்கள்

மிஸ். M. S. விஜயாள்

நடிக்கும்

# ஹரிஜன மங்கை லக்ஷ்மி

நடிகர்கள்

| | |
|---|---|
| மிஸ்டர் செருகளத்தூர் சாமா | பேபி அம்புஜம் |
| ,, பரசுராம பிள்ளை | மிஸ். திரிபுரசுந்தரி |
| ,, சுந்தரபாஷ்யம் நாயுடு | ,, கண்ணுமணி |
| ,, மானேஜிராவ் | ,, ராஜேஸ்வரி |
| ,, ராகவன் | ,, ராஜாம்பாள் |
| ,, ஜோக்கர் ராமுடு | ,, மீனாக்ஷி |
| ,, திருவாடி முத்து நாயுடு | ,, அலமேலு |

ஏழுமலை செட்டியார்

டைரக்ஷன்:—Mr. C. V. ராமன், B.A., L.L.B.

*Joint Production of* { Radha Film Co., Calcutta
C. V. Raman, B.A., L.L.B.

For Booking apply to:—

**Mr. C. V. Raman, B.A., L.L.B.,**

**60, Rash Bihary Avenue, Kalighat,**
CALCUTTA.

3 - APR 1937

ஸ்ரீ:

# ஜகன்மோகினி

ஐயுணர் வெய்தியக் கண்ணும் பயமின்றே
மெய்யுணர் வில்லா தவர்க்கு.

—திருவள்ளுவர்.

ஜகன்மோ கினியென்னுஞ் சஞ்சிகையைக் காக்க
ஜகன்மோ கினி! மனத்தைச் சார்ந்து.

ஸ்ரீ வீரராகவ கவி.



| | | |
|---|---|---|
| மலர் **14** | தாது ஹூ மாசி மீ<br>March, 1937. | இதழ்<br>**3** |



183000

*திருமால் துதி*

1 ஈசன் வகுத்திட்ட இருஜாதி மானிடரில்
எனைப்போற் கண்டதுண்டோ!
நீசனுய்ப் பிறந்தாலும் நிமலா! நின்னடி போற்றி
நினையாத நேரமுண்டோ!
ஆசையும் மோகமும் ஆருயிர் இன்பமும்
அனைத்தும் நீ என நினைந்து
பாசமாய்ப் பணிந்திடும் பாவியை வருத்தாது
பாலித்தருள் செய்குவாய்.

2 மற்றென்றும் வேண்டிலேன் மாதவா! உன்னிரு
மலரடித் துணை வேண்டி நின்றேன்
குற்றங்கள் பலவுண்டு ஏழை நான் செய்தவவை
குறியாமல் ஆண்டருளுவாய்
கற்றகலையா லுன்றன் கருணைதனை யடையவோர்
கடையனேன் திடமுற்றிலேன்
உற்றதுணை உன்றனிருபாத மெனநம்பினேன்
உபேட்சியாதடிமை கோள்வாய்.

——வை. மு. கோ.

# வெற்றியின் மர்மம்

## ஸ்ரீ M. C. ஸ்ரீநிவாசன் M.A., B.L., எழுதியது.

"அரசர்களும், அரசாங்கங்களும், அதிகாரிகளும் ஜனங்களின் பொருட்டிருக்கிறார்களா, அல்லது ஜனங்கள் வேறு, அவர்கள் வேறு" என்ற கேள்விக்கு, இந்த அறிவு முதிர்ந்த இருபதாம் நூற்றாண்டில் பதில் என்ன கிடைக்கும்? நடத்தையில் எங்ஙனமிருப்பினும் கொள்கை உலக மெங்கும் ஒரே மாதிரியிருக்கும். அக் கொள்கை யாதெனில், அரசாங்கங்கள் பொது ஜனங்களின் பொருட்டு ஏற்பட்டு, அவர்களால் ஆதரிக்கப் பட்டு வருகின்றனவென்றும், ஆதலால் பொது ஜனங்களே அரசாங்கத்தை நடத்த வேண்டு மென்பதுதான். ஆனால் பொது ஜனங்கள் ஒவ்வொரு விஷயத்திலும் தலையிட்டுக் கொள்வதாக யிருந்தால் குழப்பமும், குழப்பத்திலிருந்து கலகமும் உண்டாகும். அதன் பொருட்டு பிரதிநிதிகளைத் தேர்ந்தெடுத்து அவர்களுக்கு தங்கள் பொருட்டு பேசவோ, அபிப்பிராயத்தை வெளிப்படுத்தவோ ஜனங்கள் உத்திரவளிக்கிறார்கள். இதை உத்தேசித்துதான் தேர்தல்கள் நடக்கின்றனவென்பது படித்தவர்களுக்கெல்லாம் தெரிந்த விஷயம்.

நமது தாய் நாட்டிலும் 'ஆ ஸேது ஹிமாசலம்' வரையில் எங்கும் இம்மாதம் தேர்தல் திருவிழா நடந்தேறியது. தேசமக்களுக்கென்றும், தேச விடுதலைக்கும் பாடு பட்டு வரும் காங்கிரஸ் முதன் முறையாக, தேர்தலில் கலந்து கொண்டு வாக்காளர்களின் வாக்குரிமையை நாடிற்று. காங்கிரஸ் சார்பாக நின்றவர்கள் தனி ஹோதாவில் நிற்கவில்லையென்பது அனைவருக்கும் தெரியும். 'தேசத் தொண்டன்' என்ற எண்ணத்துடன்தான் ஜனங்களை அணுகினார்கள். காங்கிரஸ் என்ன சொல்லுகிறதோ, என்ன கட்டளை யிடுகிறதோ அதைத்தான் அவர்கள் செய்யப் போகிறார்கள். காங்கிரஸ் ஜனங்களின் சந்தோஷத்தை அதிகப்படுத்தக்கூடிய சுதந்திரத்திற்கு பாடு பட்டு வருகிறது. சுயாட்சி யில்லாவிட்டால் பொது ஜனங்களுக்கு நன்மை ஏற்படாது. மகா நதிகளாகிற கங்கை, யமுனை, சிந்து, பிரம்ம புத்திரா, கோதாவரி, கிருஷ்ணா, காவேரி இவைகள் வீணாகவே நமக்கிடையில் ஓடுகின்றன. பஞ்சமும் நோயும் ஏழை ஜனங்களை வாட்டுகின்றன.

காங்கிரஸ் எங்கும் ஜயமடைந்து வருவதற்கும், மற்ற கட்சியைச் சேர்ந்தவர்கள் ஏராளமாக பண முள்ளவர்களாக யிருப்பினும் தோல்வியடைவதற்கும் காரணம் எவருக்கும் சொல்லாமலேயே விளங்கும். அதில் ரகஸிய மொன்றுமில்லை. கேவலம் சுய நலத்தையே பெரிதாகக் கருதிக் கொண்டு, மிருகங்களாலும் வெறுக்கப்படும் அடிமை வாழ்வைப் போற்றும் ஜனங்களை நாம் கவனிக்க வேண்டியதில்லை. அவர்கள் உலகம் இருக்கும் வரையில் விஷமம் செய்து கொண்டுதானிருப்பார்கள். அவர்களைக் கண்டு பயப்படுவதோ, அவர்களின் பொருட்டு கொள்கைகளை விட்டுக் கொடுப்பதோ இயலாத காரியம். ஜமீன்தார்களின் பண்ணைகளைக் காப்பாற்றி அவற்றின் பொருட்டு முதுகு ஒடிய வெய்யிலாலடிக்கப் பட்டு வேலை செய்ய கடவுள் ஜனங்களை உண்டாக்கவில்லை. பெரிய

உத்யோகஸ்தர்களுக்கு எராளமாக சம்பளத்தைத் தந்து அவர்கள் சந்தோஷத்தை யதிகரிக்கவும், புது மோட்டார்கள் வாங்க உதவி செய்யவும், கிஸ்துக்களும், வரிகளும் கொடுக்கப்படவில்லை. இவைகள் தீமைகளென்பதில் அபிப்ராய மேற்படுவதில் அர்த்தமேயில்லை. அபிப்ராயபேத மிருப்பது நியாய மென்றாலும், ஒவ்வொரு விஷயத்திலும் அபிப்ராய பேத மேற்பட்டுக் கொண்டிருந்தால் தீங்குதான் நேரிடுமென்பதில் சந்தேகமே இல்லை.

ஜனங்களுக்கு சுதந்திர தாபம் என்னாளும் உண்டு. பசியில்லாத ஸ்த்ரீ புருஷன் உண்டா? நிழல் வேண்டாம், தங்க இடம் வேண்டாம் என்று சொல்லும் மனிதன் உண்டா? பிரிட்டிஷ் அதிகாரிகள், இந்திய மக்களி லனைவரும் பிரிட்டிஷ் அரசாங்கத்தையே விரும்புகிறார்கள். காங்கிரஸ் பொது ஜன அபிப்பிராயத்தை வெளியிடவில்லை," என்று சொல்லுகிறார்கள். சனாதன தர்மத்தைப் பின்பற்றுகிறோம் என்று சொல்லும் சிலர், "தீண்டாதவர் கோயிலுக்குள் வர இஷ்டப்படவில்லை. கோயிலை அனைவருக்கும் திறக்கச் சொல்லுபவர்கள் அவச்யமின்றிக் கூக்குரலிடுகிறார்கள்" என்று சொல்லுகிறார்கள். ஜமீன்தார்களும், முதலாளிகளும், மில் அதிகாரர்களும் "நாங்கள் ஜனங்களை அடக்கி யாளவே பிறந்திருக்கிறோம். எங்கள் சந்தோஷத்தையும் பொக்கிஷத்தையும் அதிகரிக்கவே நீங்கள் இருக்கிறீர்கள்." என்று அதட்டுகிறார்கள். இவையனைத்தும் கேவலம் மிரட்டல்களென்பதை வெளிப்படுத்தி பொது ஜனங்களுக்கு அபயமளிப்பது காங்கிரஸ் ஸ்தாபனம். காங்கிரஸ் வெற்றியின் மர்மம் ஏழை ஜனங்களின் உறுதியிலேயே இருக்கிறது.

காங்கிரஸை எதிர்ப்பது கங்கா பிரவாஹத்தைத் தடுக்க முயற்சி செய்வது போலாகும். ஹிமயமலையை தரை மட்டத்திற்கு சமானமாக்க முன் வருவதற்கு ஒப்பாகும். இதை எதிரிகள் அறியவேண்டும். பூகம்பத்தை எதிப்பது எவ்வளவு அசாத்தியமோ, அம்மாதிரியே சுதந்திர தாபத்தால் பீடிக்கப்பட்டு ததும்பிக்கொண்டு வரும் பொது ஜன உணர்ச்சியைத் தடுப்பது. சூரியன் மேகங்களைக் கண்டு பயந்து உதயமாகாமலிருக்கும் பொழுதுதான், ஜனங்கள் பணத்தையும், ஆயுதங்களையும் கண்டு பயந்து, சுதந்திரப் போராட்டத்தை விட்டு விடுவார்கள்.

---

## சந்தா நேயர்களுக்கு முக்கிய அறிவிப்பு.

சென்ற இதழில், கதையில் ஒரு பாரம் குறைத்திருந்ததைப்பற்றிச் சில நேயர்கள், "பொது சமாச்சாரங்களை அதிகப் படுத்தாவிடினும் பாவாயில்லை, கதையை ஆவலுடன் எதிர் பார்க்கும் எங்களது உற்சாகத்தைக் குறைக்கவேண்டா" மென கேட்டுக் கொள்வதால், [தற்போது பேபரின் விலை இரட்டத்தனையாகி விட்டதால் நமக்கு நஷ்டமாயினும்] நமது அன்பர்களின் ஆவலைப் பூர்த்தி செய்ய அடுத்த இதழ் முதல் வழக்கப்படி கதையை 6 பாரங்களே போட ஏற்பாடு செய்கிறோம். (ப—ர்.)

# அசெம்பிளி தேர்தல் முடிவுகள்

## சென்னை மாகாணத்தின் முதல்தர வெற்றி

### மேல் சபை

| | |
|---|---|
| காங்கிரஸ் | 27 |
| ,, அநுதாபிகள் | 4 |
| ஜஸ்டிஸ் | 4 |
| ஜனநாயகம் | 0 |
| முஸ்லிம் லீக் | 3 |
| ,, சுயேச்சை | 3 |
| ஹிந்து ,, | 2 |
| ஐரோப்பியர் | 1 |
| கிருஸ்துவர் | 2 |
| | 46 |

### அசெம்பிளி

| | |
|---|---|
| காங்கிரஸ் | **155** |
| ஜஸ்டிஸ் | 16 |
| ஜனநாயகம் | 1 |
| முஸ்லிம் லீக் | 10 |
| ஐரோப்பியர் | 7 |
| சுயேச்சை | 21 |
| | 210 |
| வரவேண்டியவை | 5 |
| | 215 |

### ஜாமீனை இழந்தவர்கள் (மேல் சபை)

| | |
|---|---|
| ஜஸ்டிஸ் | 1 |
| ஜனநாயகம் | 4 |
| மற்றவர்கள் | 6 |
| | 11 |

### ஜாமீனை இழந்தவர்கள் (அசெம்பிளி)

| | |
|---|---|
| ஜஸ்டிஸ் | 12 |
| ஜனநாயகம் | 19 |
| மற்றவர்கள் | 48 |
| | 79 |

### பம்பாய்

| | |
|---|---|
| காங்கிரஸ் | 88 |
| முஸ்லிம் லீக் | 20 |
| ,, சுயேச்சை | 10 |
| சுயேச்சை (பொது) | 22 |
| மற்றவர்கள் | 35 |
| | 175 |

### மேல் சபை

| | |
|---|---|
| காங்கிரஸ் | 13 |
| முஸ்லீம் லீக் | 2 |
| ஐரோப்பியர் | 1 |
| மற்றவர் | 9 |
| | 25 |

### எல்லைப்புறம்

| | |
|---|---|
| காங்கிரஸ் | **19** |
| ஹிந்து சீக் தேசியக்கட்சி | 7 |
| சுயேச்சை முஸ்லிம் | 2 |
| கட்சியற்ற முஸ்லிம் | 21 |
| கட்சியற்ற ஹிந்து | 1 |
| | 50 |

### ஐக்கிய மாகாணம் மேல் சபை

| | |
|---|---|
| காங்கிரஸ் | 8 |
| ஹிந்து சுயேச்சை | 22 |
| முஸ்லீம் | 16 |
| தேசீய கிருஷிகர் | 5 |
| ஐரோப்பியர் | 1 |
| | 52 |

## அசாம்

| | |
|---|---|
| **காங்கிரஸ்** | **35** |
| சுயேச்சை ஹிந்துக்கள் | 10 |
| யுனைடெட் பீபிள்ஸ் கட்சி (ஹி) | 3 |
| அசாம் முஸ்லிம் கட்சி | 5 |
| சுர்மா முஸ்லிம் கட்சி | 5 |
| முஸ்லிம் லீக் | 9 |
| முஸ்லிம் பிரஜா கட்சி | 1 |
| சுயேச்சை முஸ்லிம் | 14 |
| ஐரோப்பியர் | 9 |
| இந்திய கிறிஸ்துவர் | 1 |
| பெண் (சுயேச்சை) | 1 |
| பிற்போக்கான ஜாதியார் | 4 |
| மலைவாசிகள் | 5 |
| இந்தியத் தோட்டக்காரர் | 2 |
| தொழிலாளர் | 4 |
| | 108 |

## பீஹார்

| | |
|---|---|
| **காங்கிரஸ்** | **97** |
| அனுமதேயம் | 30 |
| முஸ்லிம் ஐக்கிய கோஷ்டி | 6 |
| ,, சுயேச்சை | 16 |
| ,, அஹ்ரார் கக்ஷி | 3 |
| | 152 |

## ஒரிஸா

| | |
|---|---|
| **காங்கிரஸ்** | **36** |
| யுனைடெட் கட்சி | 5 |
| தேசியக் கட்சி | 4 |
| சுயேச்சை வாதிகள் | 14 |
| நியமனம் | 4 |
| | 60 |

## வங்காளம்

| | |
|---|---|
| **காங்கிரஸ்** | 54 |
| முஸ்லீம் லீக் | 40 |
| ,, சுயேச்சை | 43 |
| பிரஜாக் கக்ஷி | 39 |
| ஐரோப்பியர் | 25 |
| ஆங்கிலோ இந்தியர் | 4 |
| மற்றவர்கள் | 45 |
| | 250 |

## மத்திய மாகாணம்

| | |
|---|---|
| **காங்கிரஸ்** | 69 |
| சுயேச்சை | 12 |
| பார்ப்பனரல்லாதார் | 3 |
| ஐரோப்பியர் | 1 |
| ஹிந்து சபா | 1 |
| மற்றவர்கள் | 6 |
| முஸ்லீம் | 12 |
| | 104 |
| வரவேண்டியவை | 8 |
| | 112 |

## ஐக்கிய மாகாணம்

| | |
|---|---|
| **காங்கிரஸ்** ... | **133** |
| சுயேச்சை முஸ்லிம்... | 27 |
| முஸ்லிம் லீக் ... | 29 |
| தேசிய விவசாய கோஷ்டி ... | 18 |
| சுயேச்சை ஹிந்து ... | 9 |
| நிலச்சுவான்தார் ... | 6 |
| ஐரோப்பியர் ... | 3 |
| இந்திய கிறிஸ்தவர்கள் ... | 2 |
| ஆங்கிலோ-இந்தியர்... | 1 |
| ஹிந்துசபா ... | "0" |
| | 228 |

## ஸிந்து—**57**

| | |
|---|---|
| **காங்கிரஸ்** | 7 |
| ஐக்கியக்கட்சி | 12 |
| முஸ்லீம் அரசியல் | 9 |
| ஆசாத் | 4 |
| பலுசிகள் | 8 |
| மேல சிந்து ஹிந்து | 3 |
| கீழ் ,, ,, | 5 |
| ஐரோப்பியர் | 3 |
| சுயேச்சை | 6 |

## பஞ்சாப்—**175**

| | |
|---|---|
| ஐக்கியக் கட்சி | 99 |
| காங்கிரஸ் | 18 |
| அகாலி ,, | 11 |
| தேசிய ,, | 1 |
| கால்சா தேசிய கட்சி | 13 |
| மற்றவர்கள் | 21 |
| இந்து சபை | 12 |

ஸ்ரீ

# காந்தீயத்தின் மகிமை.

## வோட்டுக் கொடுத்த விநோதங்கள்

இது வரையில் மூன்று முறை தேர்தல் சம்பந்தமான வேலைகளில் ஈடுபட்டும், போலிங்கு பூத்தில் இருந்தும் வேலை செய்தபோது ஜனங்களின் உத்ஸாகத்தை யறிந்து மிழ்ந்ததை விட இம்முறை அதிகமான உத்ஸாகத்தைக் கண்டு பெருமையும் தைரியமும் அடைகிறேன். இதற்குக் காரணம் 50 வருட காலமாக காங்கிரஸ் செய்துவந்த மகத்தான அரிய சேவையின் பலனால் படித்த ஆண் பெண் சகலருக்கும் வாக்குரிமையை வாங்கிக் கொடுத்த ஓர் சந்தோஷமே யாகும். இவையனைத்தும் காந்திஜியின் ஆத்ம சக்தியின் மகிமையினாலன்றோ!

முன்பு சத்தியமூர்த்தி—ராமசாமி முதலியார் தேர்தல் நடந்த காலத்தில், பல வருடங்களுக்குப் பின் காங்கிரஸ் சட்டசபை ப்ரவேசத்தைக் கைக்கொண்ட உத்ஸாகத்தில் தேர்தல் நடந்தும், ஸ்த்ரீ வாக்காளர்களின் தொகை அதிக மில்லாததால் இருந்த சிலர் மட்டும் வந்து ஓட்டு செய்ததே பெரிய ஆநந்தத் தோற்றமாயிருந்தது. இந்த முறை காலை 8-மணிக்கு போலிங்கு ஆரம்பிப்பதற்கு முன்பே திருவல்லிக்கேணி போலிங்கு பூத்தில் பெண்மணிகள் சுமார் 20 பேர்களுக்கு மேல் கூடிவிட்டார்கள்.

அவர்கள் எல்லோரும் இப்புதிய சட்டப்படி ஓட்டர்களான படித்த பாவையர்களாகவே இருந்தார்கள். "முதல் முதல் என் ஓட்டுதான் மஞ்சள் பெட்டியில் விழவேண்டும்...சீக்கிரம் சீட்டுக் கொடுங்கள்" என்று என்னைக் கேட்டார்கள். அம்மாதிரி பகிரங்கமாகக் கூறுவது குற்றமென்று போலிங்கு ஆபீஸரே சொன்ன பிறகு அவர்கள் மவுனமாக விருந்து 20 பேர்களும் ஸ்வாமி தரிசனத்திற்குப் போவது போல் உள்ளே சென்று வெகு சந்தோஷத்துடனும் பக்தியுடனும் ஓட்டு செய்து விட்டு வந்த காட்சி என்றும் மறக்க முடியாது. நான் என்னுடைய ஓட்டுதான் முதலில் மஞ்சள் பெட்டியில் போட வேண்டுமென்று தீர்மானித்திருந்தும் அது முடியாது போய்விட்டது.

காலை சுமார் 10 மணிக்குள்ளாக பல பெண்மணிகள் தங்கள் கடமைகள் பலவற்றில் இதுவும் ஒன்று என்று எண்ணி, வண்டி வாகனங்களையும் எதிர் பார்க்காது தாமாகவே வந்து ஓட் செய்தது இம்முறைதான் என்பதைத் தாராளமாகக் கூறலாம். அன்றைய ஓட்டு செய்ததில் நிகழ்ந்த சில ருசிகரமான சம்பவங்களை மட்டும் கூற விரும்புகிறேன்.

இரண்டு கண்களும் தெரியாத ஒரு அம்மாளை அவள் பேத்தி கையைப் பிடித்து அழைத்து வந்தாள். அந்தம்மாளை போலிங்கு ஆபீஸர் பேர் கேட்ட உடனே "இதெல்லாம் எங்க...நான்தான் மஞ்ச பெட்டிக்காரியாச்சே...அந்தக் கடுதாசியே இப்படி கொடுங்க. என் பேத்தி பெட்டிலே

போட்டுவோ..." என்று சர்வ அதிகாரத்துடன் கூறினள். பிறகு ஆபீஸரும், நானும் சென்று மஞ்சள் பெட்டியில் போட்டோம்.

இன்னோம்மாளைப் புருஷன் பேர் கேட்டதற்கு "நடராஜா நடனம் செய்கிறாரே அந்த ஊருதானுங்க...நான் போகலாமா...மஞ்சள் பெட்டிலே போட்டுடுங்க" என்றாள். தான் தாளை வாங்கிப்போடுவதையும் மறந்து உத்திரவிட்டுச் செல்ல முயன்றாள். புருஷன் பேர் சிதம்பர முதலியார் என்பதை யறிந்து நகைத்தோம்.

இன்னொரு அம்மாளின் புருஷனே அவளை யழைத்து வந்து நம்பர் வாங்கும் போது என்னிடம் சொன்னார். "நேத்திதான் 35 ரூபாயில் மஞ்சள் புடவை வாங்கினேன். அதையே கட்டிக்கொண்டு போனால்தானே நினைவிருக்கும் என்று அதைக் கட்டிக்கொண்டு வரச் சொன்னேன்" என்றார். இதைக் கேட்ட அருகிலிருந்தோர்கள் கலகலவென்று நகைத்தார்கள்.

இன்னொரு அம்மாள் ஓட்டுப் பேப்பரை வாங்கிக்கொண்டு உள்ளே சென்று மீண்டும் பேப்பருடன் வெளியே வந்து தூரத்தில் நிற்கும் தன் புருஷனைப் பார்த்து "இன்னுங்க, இரண்டு பெட்டியும் ஒன்னு வச்சிருக்கு; எதிலே போட்ரது ?" என்றாள். இதை ஆபீஸர் ஆக்ஷேபணை செய்தார். நானும் அப்படி கேட்கக்கூடாதென்று சொன்னேன். அதே சமயம் அவள் புருஷன் பல்லைக் கடித்துக்கொண்டு "காலையில் எதைப் பூசிக்கொண்டு குளித்தாய் ? நேத்தி சாமியார் எதை மந்திரித்துக் கொடுத்தார் ?" என்று கூறும்போதே "ஆமாம் மஞ்சள்...மஞ்சள்" என்று கூறிக்கொண்டே உள்ளே ஓடினள்.

இதுபோல் இன்னும் எத்தனையோ வேடிக்கைகளை நேரில் கண்ணால் கண்ட ஆநந்தத்தை என்றும் மறக்க முடியாது. இன்னும் எதிர்க் கக்ஷி அபேக்ஷகருக்கு இத்தகைய நிலைமை நேரமல் சரியான முறையில் போட்டி நடந்திருக்குமாயின் 100...க்கு...100 பேரும் இம்முறை ஓட் செய்திருப்பார்கள் என்பதில் சந்தேகமே இல்லை... அக்கக்ஷிக்குள் நல்ல, பெரிய மனிதராய் விளங்கிய ஸ்ரீமான் நடேச முதலியாரின் மரணத்திற்கு மிகவும் வருந்துகிறேன். வை. மு. கோ.

## சாரதா ஐக்கிய சங்கத்தின் வெள்ளி விழா

சாரதா ஐக்கிய சங்கம் சுமார் 25 வருடங்களுக்கு முன்பு எழும்பூரில் ஆரம்பமாகி, பல அரிய விஷயங்கள் மூலம் பெண்மணிகளின் அறிவை வளர்ச்சி செய்யும் கருத்துடன் மாதாமாதம் மீடிங்கு நடந்து வந்தது. பிறகு திருவல்லிக்கேணியில் சகோதரி சுபலக்ஷ்மி யம்மாள் அதை மும்முரமாக நடத்திய போது 1925ம் வருடம் முதல் நானும் அச் சங்கத்தை அறிய முடிந்தது. அக்காலையில் மாதம் ஒரு உபன்யாசம் என்று போட்டால் கேட்பதற்கு விருப்பமிருந்தும் வருவதற்குப் பலர் பயந்தும், சிலர் வெட்கியும் இருந்த நிலைமையிலும் அநேகர் வந்து உபன்யாசத்தைக் கேட்பார்கள். அக்காலையில் சகோதரியின் அன்பான அழைப்பிற் கிணங்க நான் சென்றும், பேசவோ பாடவோ மிகவும் பயந்ததையும் உடனே ஓடி வந்துவிட்டதை

யும் இப்போது நினைத்தால் எனக்கே சிரிப்பு வருகிறது. சில வருடங்களுக்குப் பிறகு அந்த சங்கத்தில் பாடுவதற்கு மட்டும் தைரியம் பெற்றேன். புகைப் படம் பிடிக்கிறார்கள் என்றறிந்தால் ஓட்டமாக மறைந்து விடுவேன். ஏன்? அக்காலையின் மனோபாவம் அப்படி இருந்தது. சமூகத்தின் அருமையை அறியாத பெண்களின் வம்புமாரிக்குப் பயந்தே பலர் என்போல் நடுங்கினார்கள்.

அத்தகைய நிலைமையில் நமது சகோதரி இச் சங்கத்தின் மூலமாகவே ஓர் வித்யாலயத்தையும்...ஓர் மாதர் க்ளப்பையும் ஸ்தாபித்துப் பல எதிர்ப்புகளையும்...வம்புப் புயல் காற்றையும்...வீணர்களின் தீய, ஈனமாகிய பெரும் அலைகளையும் ஜெயித்து முன்னுக்கு வந்திருக்கிறார்கள் என்றால் அந்த பெருமையும் நன்மதிப்பும் பெண்களின் இனத்திற்கே ஓர் சிகரம் வைத்ததுபோலிருக்கிறது என்பதைப் பெருமையுடன் கூறலாம். அத்தகைய அரிய சங்கத்தின் மூலம் ஸ்தாபித்த வித்யாலயம் வெகு சிறப்பாக நடந்து வருகிறது. க்ளப்பும் மிக மேன்மையுடன் நடைபெறுகின்றது.

இச்சங்கத்தின் வெள்ளி விழா மே. த. கவர்னரின் மனைவியார் தலைமையில் ஆடல், பாடல், கும்மி முதலிய கொள்கைகளுடன் விமரிசையாக மிகச் சிறப்புடன் நடந்தேறியது. அச்சமயம் ஸ்ரீமதி காயனபடு கீர்த்தனபடு ஸரஸ்வதிபாய் அவர்களின் இனிய கானாம்ருதமும் கிடைத்தது குறிப்பிடத்தக்கதாகும். இச் சங்கம் வளர்பிறை மதியம் போல் பல சிறப்புகளுடனும் எதிர் நோக்கிய லக்ஷியங்கள் வெற்றி பெற, வளரவேண்டுமாய் எல்லாம் வல்ல இறைவனை ப்ரார்த்திக்கின்றேன். வை. மு. கோ

## பரிசுகளின் விவரம்

1937௵ பிப்ரவரி மாதம் 20 தேதிக்குள் சந்தா அனுப்பியவர்களில் கீழ்க் கண்டவர்களுக்குப் பரிசுகள் விழுந்திருக்கின்றன. அவர்கள் தங்களுக்கு வேண்டிய புத்தகங்களைத் தெரிவித்தால் அனுப்புகிறோம்.

| பரிசு. ந. | ரூ. | சந்தா. ந | |
|---|---|---|---|
| 1 | 15 | A. 211 | Mr. A. Alagappan. Batu Pahat. |
| 2 | 10 | C. 44 | ,, S. R. Chettiar, Prome |
| 3 | 10 | R. 656 | ,, P. N. Ramanatha Iyer Madura |
| 4 | 5 | N. 280 | Mr. K. Narasimha Iyer, Madras. |
| 5 | 5 | S. 980 | Mr. A. Santhanam, Singapore. |
| 6 | 5 | K. 453 | Mrs. Kanakavllai Ammal, Villupuram |

மார்ச் மாதம் **20** தேதிக்குள் சந்தாவை அனுப்புவோரது நம்பர்களையும், புதிய சந்தா சேர்த்துக் கொடுப்போரது நம்பர்களையும் குலுக்கிப் போட்டு 2 சீட்டுகளை எடுத்து, ஒவ்வொன்றுக்கும் ரூ. 5 மதிப்புள்ள புத்தகங்கள் இனாமாகக் கொடுக்கப்படும்.

மானேஜர்.

# கவிதா மண்டலம்

## திருமால் இரட்டை மணி மாலை

### வெண்பா

சேவிக்குந் தொண்டர் திருவடியென் சென்னிமிசை
மேவிக் கிடந்தக்கால் மேவேனோ—தாவில்
மறைமுடிவுக் கெட்டாத வான்பொருளா மாயன்
குறைவறு மானந்தநிலை கூறு. 13

### கட்டளைக் கலித்துறை

கூறுங் கிளிமொழிக் கோதைமுன் சூடிய கோதையினைத்
தேறுங் குழலுக் கணிந்தருள் தேவனைச் செஞ்சடையான்
வீறுமனத் துறைவே தமுதல்வன் விரை மலர்த்தாள்
நாறு முடியி னரன்றோ நலம்பெறு நாவலரே. 14

### வெண்பா

நாவல ரினூறு நறுந்தேன் வறியேற்கு
மேவலருங் கற்பகமென் போதாகும்—கோவல்
இடைகழியிற் சேர்ந்த இருங்கவிஞ ரேத்தும்
புடைகழியாப் புட்கொடியான் றாள். 15

### கட்டளைக் கலித்துறை

தாளை விரும்பிய தானவன் மாமுடி சாரவுமுன்
வாளை விரும்பிய கண்ணியை வெளவிய வாளரக்கன்
மாள விரும்பிய மாயவன் மாணடி வாழ்த்துபவர்
கோளை விரும்பு கொடிய நமன்றனைக் கொல்பவரே. 16

### வெண்பா

கோல்லும் வரிசிலைக்கைக் கோமகனும் பார்த்தனுக்கு
வெல்ல வமரில் வியன்தேரில்—புல்லும்
பொருபடையை நீக்கிப் புரவியை முன்னூர்ந்த
கருமுகிலை நன்மனமே காண். 17

### கட்டளைக் கலித்துறை

காணுங் கருத்தொடு கானகத் தன்று கனிகளையே
பூணும் பெரும்பத்தி பொங்குற மென்று புரிந்துதரும்
மாணுஞ் சவரிமகிழ வருந்தி யம்மா தவட்குச்
சேணுங் கடந்த பெரும்பதந் தந்தானைச் சேர்மனமே. 18

### வெண்பா

மனத்துறையு மாலை மதியாது மாதர்
இனத்துறைய நெஞ்சே இணங்கேல்—தனத்துறையு
மாவிடத்தை யுண்டு மருதிடைபோய் நின்றானை
நாவிடத்து நிற்க நவில். 19

கட்டளைக் கலித்துறை

நவிலு மருமறை நண்ணரி யானை நறுநுதலாள்
கவலுங் குறையை முடிப்பமுன் காகத்தின் கண்ணொழித்த
அவலங் கெடுத்தரு ளப்பனை யன்பி னிறைஞ்சுமெனைப்
புவன மளித்தருள் பொற்கொடி நோக்கிடும் பூமகளே ! 20

—திரு. ராகவாசாரியர்

திருமால் இரட்டை மணி மாலை

முற்றிற்று.

---

# உதிர்ந்த மணிகள்

## அந்நியருக்கு இடங் கொடேல்

நமது சகோதர சமூகங்களைக் குறை கூறி, அந்நியர் முன் தயவுக்காகப் பல்லைக் காட்டிக் கொஞ்சுவதைவிட பெரிய மானக் கேடான காரியம் யாதுளது ?

—சர்தார் படேல்

## தர்மத்தின் நிலை

நீதி நீதி என்று பேசி வருகிறோம். ஒவ்வொரு மதமும் இதைத்தான் போதிக்கிறது. ஆனால், நடை முறையில் நாம் நீதியை நிலை நிறுத்தவில்லை.

—கனம் ஸ்ரீநிவாஸ சாஸ்திரியார்

## வேலை செய்வதெப்படி ?

ஒரு வேலையை நன்றாக ஆரம்பித்துவிட்டால், பாதி வேலை செய்த மாதிரி.

—எஸ். சத்தியமூர்த்தி

## கட்டுப்பாட்டின் அவசியம்

மகாத்மா காந்தி, காங்கிரஸ் ஆணையை மீறி நடந்தால் கூட, அவர்மீது ஒழுங்கு நடவடிக்கை எடுத்துக் கொள்ளப்படும்.

—ராஷ்டிரபதி ஜவஹர்

## ஒரே கட்சிக்குத் தான் இடமுண்டு

இந்தியாவில் காங்கிரஸ் என்ற ஒரே கட்சிதான் இருக்க முடியும். முழு காங்கிரஸ்காரர்களே இருக்கமுடியும். எவரும் அரை காங்கிரஸ்காரராகவும், கால் காங்கிரஸ்காரராகவும் இருக்க முடியாது.

—புலாபாய் தேசாய்

## சட்ட சபை வேலை ஏன்?

காங்கிரஸ் புதிய அரசியலுடன் எவ்வித சம்பந்தமும் வைத்துக்கொள்ள மறுத்துவிட்டபோதிலும், காங்கிரஸ் தன்னிடம் தேசத்திற்கு நம்பிக்கை இருக்கிறதென்பதை இத் தேர்தலில் காட்டவேண்டுமெனக் கோருகிறது.

—சரோஜினி தேவி

## ஹிந்துக்களின் சிறப்பு

சமுத்திரத்தில் எல்லா நதிகளும் போய்ச் சேருவது போல், எல்லாவித அபிப்பிராயங்களையும் உணர்ந்து மதிப்பது நமது இயற்கை. திவான் ஸர். ஸி. பி. ராமசாமி ஐயர்

## விரோதம் வேண்டாம்

மேளத்திற்காகவோ வேறு காரணங்களுக்காகவோ ஹிந்துக்களும் முஸ்லீம்களும் சண்டை போட்டுக்கொண்டால், உலகம் அவர்களைப் பார்த்து நகைக்கும்.

—மௌலான ஷௌகத் ஆலி

## சுதந்திர வீரர் யார்?

தேசத்தின் ஸ்வராஜ்யப் போராட்டம் நடக்கவேண்டுமானால், காங்கிரஸ்காரர்களையே சட்ட சபைக்கு அனுப்பவேண்டும். மற்ற கட்சியினருக்கு அதை நடத்த தைரியமோ, அனுபவமோ, தியாக புத்தியோ இல்லை.

—ஸி. ராஜகோபாலாசாரியர்

## கிராம காங்கிரஸ்

தேசத்திலுள்ள பாமர மக்களின் காங்கிரஸ் பக்தியை ருஜூப்பிக்க பெய்ஸ்பூர் காங்கிரசே சிறந்த சாக்ஷியாகும்.

—ஸி: விஜயராகவாசாரியர்

## மாதர் கடமை

தேச முன்னேற்றத்துக்கு உழைப்பது மாதர்களின் முக்கிய கடமை.

—ராஜகுமாரி அமிர்த கௌரி

## சிறந்த தர்மம்

பிறர் எது செய்தால் நமக்குப் பிடிக்காதோ, அதை நாம் பிறர்க்குச் செய்தல் கூடாது.

—திரு. ராகவாசாரியர்

# மெரினா பேச்சு

## தேர்ந்த புள்ளிகள்

இப்பொழுது இங்கிலாந்தில் பத்திரிகைத் தொழிலுக்கும் மற்றக் கைத்தொழிலுக்கும் வித்தியாசமில்லை.

—மி. லியனூர்டு மாட்டர்ஸ்

பணம் சம்பாதிக்கத்தானே தொழில். வியாபாரத்தில் தேர்ந்தவர்களல்லவா இவர்கள். இங்கு பொதுஜன சேவைக்கு இடமேது ?

## ஓர் புதுமை

ஸத்தியமூர்த்தி—பந்துலு இல்லாமை பற்றி வருத்தம்.

—ஒரு பிரபல தினசரி தலைப்பு

'பந்த்' பந்துலு ஆனது எப்போதோ தெரியவில்லை.

## அவநம்பிக்கை வேண்டாம்

வார்த்தையைக் கூறி எண்ணத்தை மறைக்கும் ஒரு ராஜ தந்திரியின் வார்த்தையைப் போல், என் வார்த்தையை எடுத்துக் கொள்ளாதீர்கள்.

—மகாத்மா காந்தி

மேல் நாட்டு ராஜ தந்திரிகள் இனி உஷாராக இருப்பார்களா, அல்லது காந்திஜி கூறியதை மறுக்க முன் வருவார்களா ?

## இப்படியும் பயப்படலாமோ ?

ஏராளமான அலுவல்களைக் கவனிக்கவேண்டி யிருப்பதனால், சரோஜினி அசௌக்கிய முற்றிருக்கிறார்.

—லக்ஷ்மணபுரி செய்தி

ஆபீஸ்களில்தான் வேலைக்குப் பயந்த குமாஸ்தாக்களுக்கு லீவ் வேண்டியிருக்கிறதென நினைத்தோம். பொதுஜன சேவையிலுமா அது தன் சொரூபத்தைக் காட்டுகிறது.

## இனி, கஷ்டப்பட வேண்டியதில்லை

100க்கு 70 வீதமுள்ள அபேக்ஷகர்கள் வாக்களிப்பார்களென எதிர்பார்க்கப்படுகிறது.

—எல்லைப்புறத் தேர்தல் செய்தி

ஓட்டர்களைப்பற்றிக் கவலையே இல்லை. அபேக்ஷகர்கள் யாருக்கு ஓட்டளிக்கப் போகிறார்களோ ?

## முன் யோசனை இல்லையே !

எட்டாவது எட்வர்ட் அரசர் முஸ்லீமாக இருந்திருப்பா

ராயின், அவர் இந்த விவாகங் காரணமாகப் பட்டம் துறக்கவே அவசியம் ஏற்பட்டிராது.

—ஸர் முகம்மது யாகூப் [சட்டசபை பிரசங்கம்]

இப்படி சந்தர்ப்பம் ஏற்படுமெனத் தெரியாமல் போய் ஆங்கில ராஜ வம்சத்தில் தோன்றிவிட்டார். இனியாவது மத மாற்றத்தினுல் பயனடைய வழியுண்டோ?

## சிரமப்பட வேண்டாம்

"அற்ப ஞானம் ஆபத்தானது என்று நான் கேட்டிருக்கிறேன். ஆனுல், அதிக ஞானமும் ஆபத்தானதுதான் என்பதை இப்பொழுது, ஹிந்துக்கள் கலப்பு விவாக மசோதா மூலம் அறிந்துகொண்டேன்." —பி. பிஜேரியா [அசெம்பிளி பிரசங்கம்]

இனி ஒருவரும் படித்துத் துன்பப்பட வேண்டியதே இல்லையல்லவா? அறியாமையே ஆபத்தில்லாதது எனச் சொல்லவும் வேண்டுமோ?

## எல்லோரும் சமம்

கடவுள் சன்னிதானத்தில் எல்லா ஜாதிகளும் சமம் என்பதைக் காட்டவே இந்த ஸ்ரீமுகம் பிறப்பிக்கப்பட்டது.

—திருவாங்கூர் மகாராஜா

இதனுல், தங்கள் பிழைப்பில் மண்விழுமோ எனப் பாதிரிகள் தவிப்பதாக வதந்தி. —"வழிப்போக்கன்"

# வெளி நாட்டுச் செய்திகள்

## பிரிட்டன்

அடுத்த 5 வருஷங்களில் ஆயுத விஸ்தரிப்புக்காக செலவழிக்கப் போகும் தொகை 150 கோடி பவுன் என வெள்ளை அறிக்கை கூறுகிறது.

## தென்னுப்பிரிக்கா

கலப்பு மணத்தடை மசோதாவையும், ஐரோப்பியரை இந்தியர் வேலையில் வைத்துக் கொள்வதைத் தடை செய்யும் மசோதாவையும் பற்றிய அபிப்பிராய பேதங்களின் விளைவாக ஸ்ரீ ஹாப்மேயர் (சமீபத்தில் இந்தியாவுக்கு வந்த தூது கோஷ்டியின் தலைவர்) தமது உள்நாட்டு மந்திரிப் பதவியை ராஜிநாமா செய்து விட்டதாகவும், மற்ற மந்திரிகள் இதில் சமரஸம் செய்து வைக்க முயற்சித்து வருவதாகவும் தெரிகிறது.

## ஸ்பேயின்

உள் நாட்டு யுத்தத்தில் கலகப் படையினருக்கு ஏராளமான சேதமும் தோல்வியும் கிடைத்து வருகின்றன.

## அபிஸீனியா

இத்தாலிய கிழாப்பிரிக்கா ராஜப்பிரதிநிதி மார்ஷல் கிராஸியானி மாதா கோவிலுக்கு முன் ஏழைகளுக்கு வெகுமதி அளித்துக் கொண்டிருந்தபோது ஒரு எதியோபியன் வெடி குண்டு வீசியதால் சிறிது காயமேற்பட்டது.

# வனிதா விலாசம்

"சூடாமணி"

"எம் பாட்டீ; நீங்க ஒண்டியா மாவரைக்கிறீர்கள்? என்? நாட்டுப்பெண் எங்கே?" என்று வழக்கம் போல் பாக்கியம் கேட்டுக்கொண்டே வந்தாள். பாட்டியும் அறைப்பதை நிறுத்திவிட்டு "வாடியம்மா! ஒக்காரு. நாளைக்கு க்ளப்பில் டீபார்டியோன்னோ! அதுக்கு ஏற்பாடு செய்யப் போயிருக்கா. பார்டீக்கு முறுக்கு செய்யலாம்னுஅறைக்கிறேன்" என்றாள். பாக்கியமும் உட்கார்ந்து எந்தரத்தைப்பிடித்து அறைக்கவாரம்பித்தபடியே "பாட்டீ! ஏதேது......நீங்கள் க்ளப்பு என்றாலே ஒரு காலத்திலே சீறி விழுந்தீர்கள்; இப்போ மெம்பராய் விட்டதோடு சென்ற முறை பரிசும் பெற்றீர்கள். பக்ஷணமும் செய்ய ஆரம்பித்து விட்டீர்கள். அப்படின்னு இருக்கணம்.

"பாட்டீ! அதிருக்கட்டும்...நேத்திக்கு காருலே ஏறிண்டு ஜம்முனு எங்கேயோ போனீர்களே! அது எங்கே போனீர்கள் பாட்டீ" என்றாள்.

பாட்டி: இதோ பாரு பாக்கியம்...எந்த அதிசயத்தையும் உன்னிடம் சொல்லாவிட்டால் மனம் சாமாதானப்படுவதில்லை. நான் வந்து சொல்ல எண்ணினேன். நீயே வந்தாய்...என்ன அதிசயம் கேட்டயா...நான் முன்னெல்லாம் சினிமாவே பாத்ததில்லை. இப்பப்பதான் பார்க்கறேன். இந்த மாதிரி சினிமா எப்படிதான் எடுக்கிறாளோன்னு நான் ஆச்சரியப்பட்டேன். என் பிள்ளைக்குத் தெரிந்த சினேகிதன் அதையும் பார்க்கும்படிச் செய்கிறேன் என்று கூறி அழைத்துச் சென்றான்.

ஓர் பெரிய தோட்டம். அதிலேயே குளம்...கோவில், வீடுகள், குடிசைகள், வயல் மாதிரியுள்ள இடங்கள், பெரிய பெரிய அரண்மனைகள் முதலிய எல்லாம் இருக்கு. அங்கே ஷூட்டிங்குன்னு அதுக்கு பேராம். எத்தனையோ புருஷாளும் பெண்களும் பவுடர் பூசி வேஷம் போட்டுக் கொண்டுநின்றார்கள். யாரோ காமிராமேனும், டைரெக்டராம், ஏதேதோ சொல்லறா. அவர்களெல்லாம் வேஷக்காரர்களை கதையில் இருப்பது போல் நடிக்கச்செய்து ஒத்திகைபாத்தா. அப்பறம் விளக்கு ஏத்தினா பாரு என் கண்ணைக் கூசிவிட்டது. அத்தனை விளக்குகள் இப்படி திருப்பி, அப்படி திருப்பி ஒரு மணி காலம் சரிபாத்தப்பறம் படம் எடுக்க வாரம்பித்தார்.

ஒரு பாட்டு...அல்லது ஒரு சம்பாஷணை...இதை மட்டும் எடுப்பதற்கு என்னமோ காப்பிக் கொட்டை அறைப்பதுபோல் ஒரு மிஷினைத் திருப்பினா. ஆய்விட்டது, முடிந்துவிட்டது என்றார்கள். இதே போல் ரெண்டு சீன் எடுக்க எத்தனை நாழியாச்சு தெரியுமா? ஐயோ பாவம்...அந்த வேஷக்காரர்கள் வேஷம் போட்டுக் கொண்டு உட்கார்ந்திருந்ததைப் பார்த்தால் பரிதாபமாயிருந்தது. இத்தனை ச்ரமப் பட்டு படம் எடுத்து திரைக்கு வந்தால் ஒரு நிமிடம் ஜனங்கள் அதை நன்னா இல்லை என்றும், இருக்கிறதென்றும் கூறி விடுகிறார்கள். இது குயவனுக்கும் தடிகாரனுக்கும் உள்ளது போல் தான் இருக்கிறது. இன்னிக்கிக் கூட என்னை அழைத்துக்

கொண்டுபோறேன்னு தான் சொன்னுன். ஆனுல் முறுக்கு ஆகண மோன்னே!" என்று இழுத்தாள்.

பாக்:—இதென்ன பாட்டீ! பார்ட்டீக்கு முறுக்கும் சீடையும் வைத்தால் சிரிப்பார்களே......புதுபுது பக்ஷணங்கள் இல்லேயோ!

பாட்டி:-எண்டியம்மா! நான் அன்னிக்கிச் சொன்னதுபோல் புதியது கழிந்து, பழையது உயர்வது இக்காலத்தின் கோலமில்லேயோ! புது பக்ஷணம் சாப்பிட்டு அலுத்துவிட்டது. முறுக்கு சீடை, போளி, சுய்யன், பொரிவளங்கா உருண்டை, சரிப்பாண்டி இதெல்லாந்தான் ருசி மறந்தே போய்விட்டது. இதை சாப்பிடவும் ஆசையாக் கூட இருக்கிறதென்று அன்று க்ளப்பில் வார்த்தை வந்தது. நான் முறுக்கு செய்து தருவதாக சொல்லிவிட்டேன். குப்பிப் பாட்டி பொறி செய்கிருளாம். இன்னும் யார் யார் என்னென்ன செய்து கொண்டு வருகிறுர்களோ! பார்த்துப் பிறகு சொல்கிறேன். மகராஜி......ரெண்டு சித்து முறுக்கு சுத்திக் கொடுத்துப் போடியம்மா...

# டாக்கி விமர்சனம் : : சங்கீத ஜேயதேவர்

## "வத்ஸ குமாரி"

சென்ற இரு இதழ்களில் இரு சகோதரர்கள், பாலயோகினி இரண்டு படங்களுக்கும் விமர்சனம் எழுதிய இந்தப் பேனு இவ் விமர்சனத்திற்கு இடம் கொடுக்காமல் தானே தடைபட்டு நிற்கிறது. என்? இதற்குக் காரணம் படத்தைப் பொறுமையுடன் பார்த்தவர்களுக்குத் தெரியுமேயன்றி பார்க்காத புண்யாத்மாக்களுக்குத் தெரியாது. அளவுக்கு மீறினல் அமிர்தமும் நஞ்சாம் என்பது பழமொழி. படத்தில் மனித உருவத்தைப் பார்க்கு முன் பாட்டைத்தான் கேட்கிறேம். சம்பாஷணேயோ பஞ்ச காலப் பொருள் போலாகிவிட்டது. எந்த பொருமைசாலிகளும் அந்தப் பாட்டைக் கேட்டுப் பொறுமையை இழக்காம லிருக்க முடியாது. ஸ்ரீ கிருஷ்ணனுக நடிக்கும் சிறுவனின் சங்கீதம் ஒன்றுதான் பாராட்டும் முறையிலிருக்கிறது. ஹாஸ்யச் சுவைக்காக குடிகாரனுக்கும் மனேவிக்கும் சண்டைபோல் காட்டும் ஆபாஸக்காட்சியைப் பார்க்கச் சகிக்கவில்லே. ஜெயதேவரின் உத்தம மனேவியுடன் நேசம் செய்யும் குடிகாரன் மனேவி கணவனே துடைப்பத்தாலும் கைகளாலும் அடிப்பதுபோல் ஒரு காட்சி காட்டுவதாயின் அது சரித்திரத்தின் மகிமைக்கே பங்கத்தையும், இழிவையும் விளேவிப்பதாகுமேயன்றி ஹாஸ்யத்தில் ஒருபோதும் சேராது. இம்மாதிரி ஆபாஸங்களே ஒழிக்கவேண்டுமென்று கூக்குரலிடும் காலத்தில்—37-வது வருடத்தில்—இம்மாதிரி வந்திருக்கிறதென்ருல் இதைப்பற்றி எப்படித்தான் எழுதுவது? இப் படத்தில் உள்ளவர்கள் நடிப்பு என்ற கலேக்கு மிகவும் விரோதி என்று தெரிகிறது. கதையிலுள்ள வேறு எந்த அபஸ்வர சங்கீதத்துடனுவது கதையை முடித்து விட்டுக் கேட்டவர்களின் காதைக் குடைந்து கொண்டே எழுந்து போகும்படிச் செய்யாது சிறுவனின் (கிருஷ்ணனின்) பாட்டுடன் முடித்திருப்பது பாராட்டத் தக்கது.

# தேர்ந்தெடுக்கப்பட்ட அரசர்கள்

## ஹிந்து மதத்திற் சேர்ந்துள்ள போலந்து தேசத்து ஸ்திரீ ஸ்ரீமதி உமாவின் பிரசங்கம்

இன்று போலந்து தேசம் ஒரு சுயராஜ்யமுள்ள நாடு. அந்நாட்டில் ஒவ்வொரு பிரஜையினுடைய சுதந்திரமும் மதிக்கப் படுகிறது. ஐரோப்பிய தேச முழுவதுமே சர்வாதிகாரம் கடுமையாக விருந்தபோது போலந்தில் ஜனநாயகம் நிலவியிருந்தது. போலந்தில் ஜனங்கள் சமாதானத்தை விரும்புபவர்கள். உற்சாகமும், தனி மனிதர் சுதந்திரமும் மிகுதியாக உள்ளவர்கள். பெண்களுக்கு மதிப்பு செலுத்துவதை அவர்களுடைய மதமாகக் கொள்கிறார்கள்.

சுமார் 5 நூற்றாண்டுகளுக்கு முன்பிருந்தே பூரண பிரஜா உரிமை இந்த நாட்டிலிருந்து வருகிறது. 15வது நூற்றாண்டில் போலந்து அரசன் தேர்ந்தெடுக்கப்பெற்றான். ஐரோப்பாவில் அரசன் தேர்ந்தெடுக்கப்பட்ட நாடு இது ஒன்றுதான். நாட்டு மக்களின் ஆதரவு இருந்தால் எந்தப் பிரபுவும் அரசனாக வந்துவிட முடியும். அரசனே நாட்டின் முதலாவது பிரஜை. யுத்த காலத்தில் அவரே சேனாதிபதி. அரசனுக்கும் மக்களுக்கும் ஒப்பந்தமுள்ள நாடு இது ஒன்றுதான். இந்த ஒப்பந்தமூலம், நெறி தவறும் அரசன் மூன்று முறை எச்சரிக்கப் படுவான். மூன்று எச்சரிக்கைகளுக்குப் பிறகு அரசன் தண்டனையாக தேசப் பிரஷ்டம் செய்யப் பெறுவான். கொலைத் தண்டனை இந்நாட்டில் கிடையாது. தேசப் பிரஷ்டம் செய்வதுதான் மிகக் கடுமையான தண்டனையாகக் கருதப்படுகிறது.

போலந்து தேசம் தற்காப்புக்காகவாவது, பிற நாட்டின் தற்காப்புக்காகவாவது அல்லாமல் யுத்தத்தில் ஈடுபட்டது கிடையாது. சுயராஜ்யப் போலந்து ஐரோப்பிய வல்லரசுகளுக்கு கண்ணைக் கரித்துக் கொண்டிருந்தது. மூன்று தடவைகள் ஜர்மெனியும், ருஷ்யாவும் படையெடுத்துப் போலந்தைப் பங்கிட்டுக் கொண்டன. 130 வருஷ கால சுயராஜ்யப் போராட்டத்தின் பிறகு உலக யுத்தத்தின் விளைவாக போலந்து மீண்டும் சுதந்திரம் அடைந்தது.

# மஞ்சள் பெட்டிக்கு ஜே!

## எதிரிகள் வாயிலும் முழக்கம்

திரு. ஈ. வே. ராமசாமி நாயக்கர் சமீபத்தில் ஈரோட்டிற் கருகாமையிலுள்ள ஒரு கிராமத்தில் பிரசங்கம் செய்தாராம். அதில் அவர் காங்கிரஸை மிகவும் பழித்துக் கூறிவிட்டு கடைசியில் "ஆகவே சகோதரர்களே! நீங்கள் என்ன செய்யவேண்டும் தெரியுமா? மங்களகரமான மஞ்சள் பெட்டியில் உங்கள் ஓட்டுகளைப் போடவேண்டும்" என்றாராம். ஜனங்களின் ஆரவாரம் இரண்டு நிமிஷம் தாங்கமுடியாதிருந்ததாம். இதைக்கேட்ட ஜனங்கள் காங்கிரஸின் சார்பில் கடவுள் துணை இருக்கிறாரென்று சொல்லி வியந்தனராம். திரு. நாயக்கர் அவர்களும் திகைத்துப்போய் எதிரிக்கு ஆதரவு தன்னை யறியாமலே வருகிறதென்று குறிப்பிட்டாராம்.

—செட்டிநாடு.

1—2 forms Printed at Kabeer Printing Works, Triplicane, Madras.

## 10-வது அதிகாரம்

## கொலைக்கு அஞ்சாக் கொடிய அரக்கன்

கடவுள் ஒருவரைத்தான் உலகத்தில் மக்கள் ஏமாற்ற முடியாது என்பதை பல அனுபவங்களால் தெரிந்தும் சிலர் அதை அறிவதில்லை. "எனக்கு மிஞ்சிய கெட்டிக்காரர்கள், வீரர்கள், சூரர்கள் உலகத்திலேயே இல்லை', என்று மார்தட்டும் ஒருவன் கூட அவனைப் படைத்த ரக்ஷகன் இருப்பதை மறந்து விடுகிறான். இவர்கள் எத்தனை தான் நன்மையோ தீமையோ...துன்மார்க்கத்திலோ! சன்மார்க்கத்திலோ காரியங்களைச் செய்த போதிலும் அதற்குப் பலாபலனைக் கொடுப்பவன் அந்த ஆதி மூர்த்தியல்லவா! உலகத்தைப் படைத்த கர்த்தனின் கையிலல்லவா இருக்கிறது. இந்த உண்மையை ஒவ்வொருவரின் ஜீவிய வாழ்க்கையின் அனுபவத்தில் நன்கறியலாம்.

சவத்திற்கு ஒப்பாகக் கிடக்கும் சாந்தமூர்த்தியையும் வண்டிக்காரனையும் சந்திரன் ஆஸ்பத்திரிக்குக் கொண்டு சென்றான். "மூர்த்தியின் காலில் பலமான தடிக்கொம்புகளினால் நல்ல பலத்த அடி பட்டு விட்டதால் எலும்பே உடைந்திருக்குமோ வென்று சந்தேகமாக விருக்கிறது. எக்ஸ்ரே போட்டோ பிடித்துப் பார்த்தால் தான் சொல்ல முடியும்'' என்று டாக்டர் கூறி தத்கால சாந்தியாக வைத்தியம் செய்தார்.

காலை ஏழு மணி சுமாருக்கு சாந்தமூர்த்திக்குச் சற்று தெளிவு உண்டாகியது. பக்கலில் தன் நண்பன் சந்திரசேகரன் உட்கார்ந்திருப்பதைக் கண்டான். தான் இப்போது எங்கிருக்கிறோம்... வீட்டிலா......அல்லது வேறிடத்திலா......என்பது அவனுக்கு கலவரம் உண்டாகியது. சந்திரசேகரனின் கைகளைப் பிடித்துக்

கொண்டு "சந்த்ரு......நான் இப்போது......என்று இழுத்தார் போல் கேட்டு முடிப்பதற்குள் "மூர்த்தி!......பயப்படாதே......நீ இப்போது ஆஸ்பத்திரியிலிருக்கிறாய். டாக்டர் சரியான சிகிச்சை கொடுத்திருக்கிறார். பயப்படாதே......உனக்கு இம்மாதிரி விபத்து எவ்விதம் உண்டாகியது?'' என்று கண்ணீர் வழியக் கேட்டான்.

சாந்த:—சந்துரு........நான் ஜட்கா வண்டியில் தென்னந் தோப்பினருகில் வரும்போது கூட்டமாக சுமார் பத்து, பதினைந்து பேர்கள் வந்து எங்களை தலைகால் தெரியாமல் உதைத்தது தான் தெரியும். அப்போது "டேய்......முனிசிபல் கவுன்ஸிலராடா நீ! ......கவுன்ஸிலரா......பேஷ்......பேஷ் ஜீவகாருண்ய சங்கத்தின் காரியதரிசி இல்லையா?'' என்று சிலர் கூவியது மட்டும் காதில் விழுந் தது. மறு பேச்சு பேசுவதற்குள் என்னுடைய நிலைமை மோசமாகி விட்டது. ப்ரக்ஞையும் தவறி விட்டது. இப்போது தான் கண்ணை விழிக்கிறேன். எல்லாம் பதவி வேட்டையின் கூத்துகள். கொலை செய்யவும் துணிந்த பின்னர் இனிமேல் வியப்புற இடமே இல்லை. வீட்டில் குழந்தைகள்...என்ன செய்கிறார்கள்?

சந்தி:—குழந்தைகளுக்கும் உன் மனைவிக்கும் இந்த விஷயங் கள் ஒன்றுமே தெரியாது. மூர்த்தி! இந்த சம்பவத்தை உடனே போலீஸில் தகவல் கொடுக்கவேண்டாமா! இப்படிப் பட்ட அனியா யங்களுக்குக் கூட இடங்கொடுத்துப் பேசாமலிருக்கலாமா! நீ சற்று ஓய்வு எடுத்துக்கொண்டு படுத்திரு. நான் போலீஸில் தகவல் கொடுத்துவிட்டு வருகிறேன்'' என்று கூறிக்கொண்டே போய் விட்டான்......சாந்தமூர்த்திக்கோ தேகம் முற்றும் வலி தாங்கவே முடியவில்லை. மரண வேதனை செய்கிறது. அவனால் கூறத் திறமற்ற ஓர் சங்கடம் அவனை மீறி இதயத்தைப் பிளக்கிறது. கடவுளை த்யா னித்த படியே கண்ணை மூடியவாறு படுத்திருந்தான்.

போலீஸுக்குச் சென்று தகவல் கொடுத்து விட்டு சந்திரன் நேரே சாந்தமூர்த்தியின் வீட்டிற்கு வந்தான். குழந்தைகள் வாச லில் நின்றபடியே 'எங்கப்பா எங்கே மாமா! இன்னும் ஏன் வர வில்லை?' என்று கேட்டார்கள். இதைக் கேட்கும்போது சந்திர

சேகரனின் தலையே சுழல்வதுபோலாகி விட்டது. அவன் என்ன விதமான பதில் சொல்ல முடியும்? தலையைக் குனிந்தபடியே "இரம்மா! இரு. அப்பா வந்துடுவார். வாருங்கள்" என்று கூறிக் கொண்டே உள்ளே சென்றான்.

கிருஷ்ணகுமாரி அப்பா! அம்மா! வென்று முனகிக்கொண்டே படுத்திருந்தாள். சந்திரனைக் கண்டதும் "அவர் வந்து விட்டாரா?" என்று கேட்டாள் "இனி இத்தனை விபரீதமான செய்கையை மறைத்துப் பேசி உபயோகமென்ன? இது ஒளித்துச் சொல்லும் செய்தியா! டாக்டர் கூறியதிலிருந்து கால் எலும்பு கூடிவருமோ, வராதோ! என்ற சந்தேகமும் இருக்கையில் இனி என்ன செய்வது? சொல்லி விடுவதுதான் உசிதம்" என்ற தனக்குள் தீர்மானித்துக் கொண்டு நடந்த விஷயத்தைக் கூறிவிட்டான்.

இது கேட்ட கிருஷ்ணகுமாரிக்குத் தலைமீது இடி இடித்தது போலாகி விட்டது. "என்ன! என்ன! அவரை ஆஸ்பத்திரியில் விட்டிருக்கிறதா! கால் எலும்பு ஒடிந்து விட்டதா! ஐயோ! கொடுமையே! இதை என்னால் சகிக்கமுடியவில்லையே?என்ன செய்வேன்?" என்று மனம் பதறிக் கண்ணீர் சிந்தியபடியே மவுனமாகிவிட்டாள். சில வினாடிகள் சென்ற பின்னர் "ஐயா! அவர் எப்படி இருக்கிறார்? அவருக்கு என் விஷயங்கள் தெரியுமா! இந்த சமயத்தில் நான் அவரை வந்து பார்க்காமல் எப்படி இருப்பேன்......நான் வந்தால் என் கால் விஷயத்தைத் தெரிந்து கொள்வாரே! நான் என்ன செய்வேன்?" என்று வருந்தினாள்.

சந்தி:—அம்மணீ! நான் வீட்டு நிலைமையை இன்னும் கூறவில்லை. இச்சமயம் இது தெரியாதிருப்பது உசிதந்தான். ஆனால் அவன் குழந்தைகளைப் பார்க்கப் பேராவலுடன் இருக்கிறான். அவர்களை மட்டும் அழைத்துச் செல்கிறேன். நீங்கள் கவலைப்பட வேண்டாம்." என்று கூறிவிட்டுக் குழந்தைகளை மட்டும் அழைத்துக் கொண்டு மீண்டும் ஆஸ்பத்திரிக்குச் சென்றான்.

குழந்தைகளைக் கண்ட சாந்தமூர்த்திக்கு துக்கம் தாங்க முடியவில்லை. இதயத்தைப் பிய்த்துக் கொண்டு விட்டது. குழந்தைகளைக்

கட்டிக்கொண்டு மார்மீது சாய்த்து அணைத்துக்கொண்டு மவுனியாய் விட்டான். "அம்மா ஏன் வரவில்லை?" என்று கேட்கவே இல்லை. அவனைப் பார்த்ததுமே பெரிய குழந்தை "என்னப்பா! உனக்குமா அடிபட்டது. நேத்து அம்மாவெ நாய் கடிச்சுடுத்து, கால்லெ கட்டிக்கிண்டு படுத்திருக்காப்பா! நீயும் இங்கே படுத்துண்டெயே... ஓன்னையுமாப்பா நாய் கடிச்சுடுத்து?" என்று கள்ளம் இல்லாத உள்ளத்துடன் கேட்டது.

இதைக் கேட்ட சாந்தமூர்த்தி "என்னப்பா......அம்மாவை நாய் கடித்ததா? எங்கே எப்போது கடித்தது? டாக்டர் வந்தாரா? மருந்து போட்டாரா?" என்றான்.

குழந்தை:—மருந்து போட்டாப்பா! அம்மா அழுதுண்டே இருக்காப்பா! வலி தாங்க முடியலயாம்பா! ஓனக்கு என்னப்பா அடி பட்டது...என்று கேட்டுக் கொண்டே தகப்பனைத் தடவியது.

சாந்தமூர்த்திக்கு ஒன்றும் பேசவே பிடிக்கவில்லை. எனினும் குழந்தைகளின் கேள்விக்கு பதில் கூறுவிடில் அவர்கள் சும்மா இருப்பார்களா! "கண்ணே! எனக்கு ஜுரம். அதோடு தடுக்கி விழுந்து விட்டேன். அதனால் அடிபட்டுவிட்டது. நீங்கள் வீட்டில் அம்மாவை ஜாக்ரதையாகப் பார்த்துக் கொள்ளுங்கள். நான் உடம்பு குணமானதும் வருகிறேன். சமத்தாக இருங்கள்" என்று கூறி ஒவ்வொரு குழந்தையையும் கட்டி முத்தமிட்டான்" அடுத்த நிமிடமே சந்திரசேகரன் குழந்தைகளை வீட்டிற்கு அழைத்துச் சென்று விட்டான்.

சாந்தமூர்த்தியின் ஊரில் வீடு தீக்கிரையானதும் அவன் வழியில் துஷ்டர்களால் தாக்கப்பட்டு ஆஸ்பத்திரியில் கிடக்கும் செய்தியும் ஊர் முற்றும் பரவிவிட்டது. ஊராரின் வழக்கப்படிக்கு தங்கள் தங்கள் மனம் போனபடிக்குப் பேச்சைக் கொட்டி யளந்து வந்தார்கள்.

சாந்தமூர்த்தியின் காலை எக்ஸ்ரே எடுத்துப் பார்த்தார்கள். "காலின் எலும்பு நன்றாக ஒடிந்து விட்டது. உள்ளுக்குள்ளே ரண

மாகி விடும்போலவும் இருக்கிறது சீ பிடித்து விஷமாவதற்கு முன்பு பெரிய ஆபரேஷன் செய்து பார்த்து விட வேண்டும். அதில் சரியாகி விட்டால் பாதகமில்லை. சற்று சாய்ந்து சாய்ந்தாவது நடக்க முடியும். அதில் சரியாக வில்லை என்றால் சந்தேகந்தான். நாங்கள் உத்திரவாதங் கொடுக்க முடியாது'' என்று பெரிய டாக்டர் சாந்த மூர்த்தியிடமே சொல்லிவிட்டார்.

அந்தோ! பரிதாபம்...இந்த வார்த்தையைக் கேட்டதும் சாந்தமூர்த்தியின் உயிர் பெரும்பாகமும் நீங்கிவிட்டதுபோலவே ஆய்விட்டது. காலுக்கு ஊனமேற்பட்டு நான் நொண்டி என்ற பெயருடன் உயிர் வாழ்வதைவிட இது உள்ளூர ரண ஜன்னி கண்டு என்னுருயிரை வாங்கிக் கொண்டு போய் விடக்கூடாதா? பகவானே ......பகவானே......என்னை என்னென்ன கோலங்களுக்கு ஆளாக்கப் போகிறாய்? எத்தனைவித சோதனைச் சுழலில் தான் என்னை சிக்க வைக்கப் போகிறாய்......ஐயோ! என் விதி இப்படியா முடிந்து விடப்போகிறது?'' என்று தனக்குள் அபாரமான வருத்தத்துடன் ப்ரக்ஞையே அற்றான்

தேர்தல் முழக்கம் ஒரு புறம் பெருந்தீ போல் பற்றி எரிகிறது. சாந்தமூர்த்திக்கு உண்டான விபத்துக்கள் ஒன்றையும் வஸந்தகுமாரி அறிய மாட்டாள். தன் சகோதரி அண்ணனைத் தேடிக்கொண்டு வந்த தகவல் மட்டும் குலசேகரன் வெகு இழிவாகக் கூறியதாலும், திட்டியதாலும் தெரிய வந்தது. ஆனால் அச் சிறுமி என்ன செய்ய முடியும்? நாய் கடித்து விட்ட விஷயம் அப் போதும் தெரியாது. ஒரு விதமான சமரஸத்திற்கு வருவதையும் பாவி தடுத்துக் கொண்டானே என்ன செய்வது? புராணத்தில் கம்ஸன் தன் சகோதரியின் மீது காட்டிய வஞ்சத்தைவிட அதிகமாக இவன் கொண்டாடுகிறானே......இது எம்மட்டில் சென்று முடியுமோ தெரியவில்லையே!'' என்று இரவு பகல் வஸந்தகுமாரி இதே கவலைப்பட்டு வந்தாள்.

தேர்தலுக்கு 25 தினங்களுக்கு முன்பு இம்மாதிரி அமளிகள் எல்லாம் நடந்து விட்டன. அதற்குப் பின்னரும் நடந்த அலங்

கோலங்களும் அடிதடிகளும் கல்வீச்சுக்களும் கணக்கு வழக்கின்றி சரமாரியாக நடைபெற்றுக் கொண்டே வருகின்றன. தேர்தலுக்கு இரண்டு நாட்களுக்கு முன்பே சோதாக் கூட்டங்களை பெருவாரி யாகச் சேர்த்து அவர்களால் எத்தனை அக்ரமங்கள் செய்யக் கூடுமோ அத்தனையும் செய்ய ஏவி விட்டார்கள்.

வாக்காளர்களுக்கு ஏராளமான லஞ்சத்தைக் கொடுத்து "எங்களுக்கே வாக்கைக் கொடுங்கள். இல்லையேல் உங்கள் குடிசை களைக் கொளுத்தி விடுவோம். அதைச் செய்வோம் இதைச் செய் வோம்'' என்று பயமூட்டுவதும், லஞ்சம் வாங்க மறுத்தவர்களை நன்றாக இம்சிப்பதும், கூறத்தகாத அக்ரமங்களை எல்லாம் செய்து வாக்காளர்களுக்கு வரத்துப் போக்கு வசதியையும் தடுத்து எத்த னையோ கர்ணங்கள் போட்டுத் தேர்தல் நடக்கிறது.

சாந்தமூர்த்தியின் கதி இவ்வாறாகிவிட்ட பிறகு அவன் கால் முறிந்து விட்டதுபோல் மனமே முறிந்து விட்டது. அவன் தேர் தலைப் பற்றி மனத்தினால் நினைப்பதையும் வெறுத்துச் சவம்போலாய் விட்டான். தேர்தலன்று தான் சாந்தமூர்த்தியின் பெரிய ஆபரே ஷன் நடந்து அவன் உயிருக்கும் மன்றாடும்படியான நிலைமை ஏற் பட்டிருந்தது.

அன்று ஊரே அமளிப்படுகின்றது. தேர்தல் அன்றுடன் முடிந்து விட்டது. சாந்தமூர்த்தியின் கக்ஷிக்குத் தகுந்த வேலை செய்பவர்கள் யாருமே இல்லை. யாரோ சில தொழிலாளர் மட்டும் வேலை செய்து வந்தார்கள். பிரகாசம் தேர்தலினன்று விலகி விட் டதால் ஜயம் முற்றும் குலசேகரத்தி னுடையதுதான் என்பதைக் கூற வேண்டுமா? அவனுடைய கோஷ்டியின் உத்சாகமும், அவனு டைய செறுக்கு நிறைந்த சந்தோஷமும் இமயமலை வரைக்கும் எட்டி விட்டது....ஏன்? மொத்தம் பதிவாயிருக்கும் வாக்கின் எண்ணிக் கையே மிக மிகக் குறைவுதான்.

மொத்த வாக்குகளில் நூற்றுக்குப் பத்து கூடப் பதிவாக வில்லை. அட்டகாஸங்களும் அமக்களமும் அதிகமாக இருந்ததே யன்றி வேறு ஒன்றும் நடக்கவில்லை யாதலால் எலெக்ஷனின்

முடிவு எளிதில் தெரிந்து கொண்டார்கள். பதிவாகியுள்ள வாக்குகள் முற்றும் தன்னுடையதே என்ற நம்பிக்கை அதிகரித்து விட்டது. அன்று வாக்குப் பதிவு முடிந்த உடனேயே குலசேகரத்திற்கு பெரிய மாலைகள் சூட்டி ஜே கோஷங்கள் முழங்க ஆரவாரித்தார்கள்.

மறு தினம் காலையில் வாக்குகள் எண்ணவாரம்பித்தார்கள். குலசேகரனின் கூட்டத்தினர் பெருந்திரளாகக் கூடி விட்டார்கள்.

சாந்தமூர்த்தியின் சார்பாக சந்திரசேகரன் ஒருவனே வந்திருந்தான். அவனுடைய முகத்தில் தெம்பே இல்லை. இத்தனை சாந்தமாக வேலை செய்தும் கடைசியில் இவ்விதம் ஆய்விட்டதே! வேண்டுமென்றல்லவா அவனை இம்சை செய்தார்கள்? ஊம். பகவான் ஒருவனில்லையா! பார்த்துக் கொள்கிறான்'' என்று தனக்குள் எண்ணிய படியே உட்கார்ந்திருந்தான்.

வாக்குகள் எண்ணவாரம்பித்தாயிற்று. முதலில் எடுத்த வாக்கு சாந்தமூர்த்தி என்றிருந்தது கண்டு குலசேகரனின் வயிறெரிந்தது. மீசையை முறுக்கிக் கொண்டு தன் சகாக்களை நோக்கினான். அடுத்த நான்கு வாக்குகள் குலசேகரனுக்கு சேர்ந்தார்ப்போல் எண்ணியதைப் பார்த்ததும் சந்தோஷம் சொல்ல முடியவில்லை. பெரிய நகைப்பும் ஆரவாரமும் கிளம்பியது. இதற்குள் இலாக்கா அதிகாரி "ஐயா! இந்த இடம் ஆபீஸ் என்றும், அதிகாரத்திற்குள் பட்டதென்றும் நினை விருக்கட்டும்'' என்றார்.

அடுத்தபடியாக எண்ணும் ஒவ்வொரு ஓட்டும் சாந்தமூர்த்தி, சாந்தமூர்த்தி என்ற சப்தமே வருவதைப் பார்த்ததும் சந்திரசேகரனின் தலை சற்று நிமிர்ந்தது. குலசேகரனின் கண்கள் சுழலமிடுகின்றன. 50 ஓட்டுகள் சாந்தமூர்த்திக்கு எண்ணிய பிறகு 10 ஓட்டுக்கள் குலசேகரனுக்குக் கிடைத்தன.

மொத்தம் மதிவான வாக்கில் 100 சாந்தமூர்த்திக்கும் 20 குலசேகரனுக்கும் கணக்கு எடுத்தாயிற்று. இனி என்ன செய்வது? குலசேகரனின் கோஷ்டிகள் தயாராக வைத்திருந்த மேளதாள பாண்டு வாத்தியங்களை அப்படியே திருப்பி யனுப்பி விட்டு ஒவ்

வொருவரும் சாவு கொடுத்துச் சங்கடப் படுகிறவர்கள்போல் மெல்ல நழுவவாரம்பித்தார்கள்.

வீதியில் கூடி இருந்த பொது மக்கள் "அடே பாவி! கம்ஸனையே நல்லவனாக்கி விட்ட நீயா வாழப் போகிறாய்? அவனுக்குச் செய்த அக்கிரமங்களும் சதிகளும் பகவான் பொறுப்பாரா? அத்தனையும் அத்தனை வாக்குகளாக வந்து விட்டன. இனியாவது புத்திவருமா! வென்று கத்துகிறார்கள். தலை காட்ட முடியவில்லை, ப்ராணன் போவது போலாகி விட்டது.

சந்திரசேகரன் வெகு சந்தோஷத்துடன் ஒரு ரோஜாமாலையை வாங்கிக் கொண்டு ஆஸ்பத்திரிக்கு ஓடிவந்து "மூர்த்தி! மூர்த்தி! கடவுளின் செயலைப் பார்த்தாயா! உனக்கு ஜெயத்தைக் கொடுத்து விட்டார். மலடிக்கு எதிர்பாராமல் ஓர் ஆண்மகன் பிறந்து விட்டது போல் நாம் கைவிட்ட விஷயத்தில் ஜெயம் உனக்கே கிடைத்து விட்டது. இந்த அதிசயத்தைக் கூறவே திறமல்ல. சாந்தமூர்த்தி! இந்த சுப சகுனமே உன் குணத்திற்கும் அறிகுறியாகும்." என்று கூறிக்கொண்டே அவனைத் தூக்கிப் பிடித்து உட்காரச் செய்து ரோஜாமாலையை அணிவித்து "சாந்தமூர்த்திக்கு ஜே!" என்று தன்னை மீறிய ஆநந்தத்தினால், ஆஸ்பத்திரி என்பதையும் மறந்து கூறி விட்டான்.

இந்த எதிர்பாராத சந்தோஷத்தைக் கேட்டதும் சாந்தமூர்த்தியின் அத்தனை வேதனையிலும் கடவுள் தனக்கு ஜெயத்தைக் கொடுத்த ஆநந்தமே அதிகமாகத் தோன்றியது. தன் தந்தையின் வாக்கைக் கடவுள் நிறைவேற்றி வைத்ததற்கு மனமாறக் கடவுளையும் தன் பிதாவையும் வணங்கினான். பதிலே என்றும் சொல்ல முடியவில்லை. சற்று நேரம் மவுனமாகவே இருந்தான். அருகிலிருந்த எல்லோரும் சாந்தமூர்த்தியின் ஜெயத்தைக்கேட்டு பரம சந்தோஷமடைந்தார்கள்.

சாந்தமூர்த்தியின் புகைப்படத்தை அன்று அலங்காரம் செய்து ஊர்வலமும் பொதுக் கூட்டமும் நடத்தினார்கள். பொதுக் கூட்டத்தில் பெய்த கல்மாரியில் சில சிறுவர்களுக்கு நல்ல காயம்

பட்டு விட்டது. "இனி என்னதான் மலையைப் புரட்டினாலும் தோல்விக்கு மாற்று தேட முடியுமா! சாந்தமூர்த்தியையே ஒழித்து விட்டால் ஒருகால் மறு தேர்தலில் ஜெயிக்கலாமோ, என்னவோ!'' என்று ஜனங்கள் கிண்டலாகக் கூறிக்கொண்டார்கள்.

குலசேகரனின் தோல்வியைக் கேட்டதும் திருவேங்கடத்திற்கு கொஞ்சம் நஞ்சமிருந்த தெளிவும் மறைந்து போய் முழு பயித்தியம் பிடித்து விட்டது. பட்டிண வாஸத்தை விட்டு பழய குருடி கதவைத் திறவடி என்ற பழமொழிப்படிக்கு பட்டிக் காட்டிற்கே ப்ரயாணமாகிவிட்ட பிறகுதான் வஸந்தகுமாரிக்கு இவர்கள் செய்த அக்ரமமும் சாந்தமூர்த்தியின் காலை ஒடித்து விட்ட கிராதகத்தனமும் தெரிந்தது. இனி எது தெரிந்து என்ன செய்ய முடியும்? வஸந்தகுமாரியின் பரிதாபந்தான் அதிகரித்து விட்டது. பயித்தியப் பிதாவுடனும் வெறி பிடித்த அண்ணனுடனும் ஓர் இளமங்கை தனி வாழ்க்கை நடத்த வேண்டுமாயின் எத்தனை துன்பம்......எத்தனை விசனம்! எத்தனை பயங்கரங்கள்...யார் யார் விதியை யார் மாற்ற முடியும்! "ஐயோ! இந்த பாழும் சம்மந்தம் செய்ததனாலன்றோ இத்தனை ஆபத்துக்களும் வந்து விட்டன! என்ன வேளையில் அந்தப்பாவி......சோதாவை கிருஷ்ணகுமாரி நேசித்தாளோ!'' என்ற வெறுப்பும் மன அருவருப்பும் வஸந்தவல்லியிடம் குடி கொண்டு விட்டன.

---


# அன்பின் சிகரம்

ஸ்ரீமதி வை. மு. கோதைநாயகி அம்மாள் எழுதிய புதிய நாவல். பக்திப் பெருக்கும், காதல் ரசமும் நிரம்பியது. உயிரினுமினிய உள்ளன்புடன் செய்த உபகாரத்தின் அருமையை யறியாத அன்பற்ற அலகையின் முடிவு என்ன?

நாலணு ஸ்டாம்பு அனுப்பிப் பெற்றுக்கொள்ளவும்.

## 11-வது அதிகாரம்

### திருட்டு நெஞ்சின் தவிப்பு—திகட்டா அன்பின் இனிப்பு

மேற்குறித்த சம்பவங்கள் நிகழ்ந்து இரண்டு மாத காலம் மாயமாக மறைந்து விட்டது. குலசேகரன் தான் ஏற்கெனவே தீர்மானித்திருந்தபடியே ஒருவருக்கும் தெரியாமல் ரகஸியமாக விவாகத்தைச் செய்து கொண்டான். மனைவியும் வீட்டோடு வந்து விட்டாள். வஸந்தகுமாரியின் நிலைமை சற்று அவர்களுக்குக் கீழ்ப்படிந்து நடக்க வேண்டிய தாகிவிட்டது.

வஸந்தகுமாரியை மணக்கும்படி ப்ரகாசத்தை குலசேகரன் கேட்டபோது அவன் தனக்கு இன்னும் சிலகாலம் வரையில் விவாகம் வேண்டாம் என்று தோன்றுவதால் மன்னிக்கும்படியும் விவாகம் செய்து கொள்ளும் எண்ணம் உதிக்கும்போது வஸந்தகுமாரியையே செய்து கொள்வதாகவும் கூறிவிட்டான். இம்மாதிரி அவன் கூறியதற்குக் காரணம் கிருஷ்ணகுமாரியின் ரகஸ்யம் ஒன்றும், குலசேகரன் கிருஷ்ணகுமாரியின்பால் நாயினும் கொடிய நாய்போல் நடந்து கொண்டு நாயைக் கடிக்கச் செய்த செய்கை மிகவும் வெறுப்பையும் கோபத்தையும் உண்டாக்கி விட்டதும் தான். ஆனல், அதை வெளியிடாமல் மேற்குறித்ததுபோல் சொல்லிவிட்டான்

சாந்தமூர்த்தியின் நிலைமையை விவரிக்க வேண்டுமா! அவனுடைய சாந்தம் அவனுடைய உயிரை மட்டும் காத்ததேயன்றி காலைக் காக்கவில்லை. ஊனம் ஊனந்தான் என்ற முடிவு கிடைத்து விட்டது. "சில மாதங்கள் வரையில் காலைக் கீழே பாவி நடக்கவே கூடாது; கட்டை பிடித்துக்கொண்டுதான் நடக்க வேண்டும். எலும்புகளெல்லாம் ஒன்றோடொன்று சரியாக ஒத்துக் கொண்ட

பிறகு முடியுமானல் நொண்டி நொண்டி நடக்கலாம். இப்போதே காலைக் கீழே வைத்தால் நரம்புகள் பிசகி விடும். எலும்புகள் பிசகி விடும்; எலும்புகள் கூடாது'' என்று டாக்டர்கள் கூறி விட்டார்கள்.

சுமார் மூன்று மாத காலம் ஆஸ்பத்திரியிலேயே இருந்தான். பிறகு கட்டையை ஊன்றிய படியே வெளியே வந்தான். பிறர் கண்ணுக்குப் படாமல் வீட்டிற்குள் போகும்போது அவனல் தாங்க முடியாத விசனமும் கலக்கமும் சூழ்ந்து கொண்டன. அவனுடைய குழந்தைகள் அவன் அலங்கோலத்தைக் கண்டு "அப்பா! ஏன் இப்படி நடக்கறே?......ஏம்பா. ஒன்கால்லெ என்னப்பா'' என்று கண்ணீர் விட வாரம்பித்தன. அந்த பச்சைக் குழந்தைகளின் கண்ராவியைக் காண இன்னும் அதிகரித்த விசனம் உண்டாகி விட்டது.

கிருஷ்ணகுமாரிக்கு நாய் கடித்த விஷம் தீரவே இல்லை. எத்தனை வைத்தியம் செய்தும். அது பெரிய வேட்டை நாயின் வெறி பிடித்த கடியாகையினல் ரத்தத்தையே பற்றி விட்டது. அதனல் இருமலும் இழுப்பும் நாயிக்கு இறைப்பதுபோல் இறைப்பும். சில சமயங்களில் குரைப்பும் உண்டாகி விட்டன.

மனைவியின் கோரத்தையும், குழந்தைகள் நரம்பும் தோலுமாக ஆகிவிட்டதையும், வீடு படும் கண்ராவியையும் கண்டு அவனல் சகிக்கவே முடியவில்லை. விம்மி விம்மி சிறு குழந்தையைப் போல் கதறினன். கிருஷ்ணகுமாரியைப் பார்த்தான் ஆனல் வாய் திறந்து பேச அவனல் முடிய வில்லை. படுக்கையில் படுத்தபடியே கிருஷ்ண குமாரி அவன் முகத்தைப் பார்த்ததும்—அவன் கட்டை வைத்துக் கொண்டு நடப்பதைப் பார்த்ததும்—அவளால் சகிக்கவே முடியாது துக்கம் பொங்கி விட்டது. கோ வெனக் கதறியவாறு குப்புறப் படுத்துக் குலுங்கக் குலுங்கப் புலம்புகிருள்.

சாந்தமூர்த்தியின் அத்தனை நிலைமையிலும் தன் சாந்தத்தை விடவில்லை. "கிருஷ்ணு! நீ ஏன் கதறுகிருய். எல்லாம் நான் செய்த பாவம். என்னுடைய கர்மங்களை நான் அனுபவிக்கிறேன். இதோடு

விட்டதோ! இன்னும் இருக்கிறதோ? யார் கண்டது? வருந்தாதே! நீ என்னை மணக்காது ப்ரகாசத்தையே மணந்திருப்பின் எத்தனையோ சுகமாகவும் சந்தோஷத்துடனும் வாழ்ந்திருப்பாய். என்னுடைய நிழல் உன்னையும் தாக்குகிறது'' என்று கூறிக் கண்ணீர் உதிர்த்தான். கிருஷ்ணகுமாரியால் பேச முடியவில்லை எனினும் தன்னால் தான் அவனுக்கு இத்தனை விபத்துக்கள் உண்டாகி அங்கஹீனமும் ஏற்பட்டு விட்டது என்ற உணர்ச்சி சுருக்கென்று தைத்தது. கண்ணீர் வழிய மவுனமே வடிவாகி விட்டாள்.

சாந்தமூர்த்தி ஊரிலிருந்த நிலங்களில் பாதிக்குமேல் விற்று விட்டு அந்த தொகையில் தென்னந் தோப்பிலுள்ள மனையில் தனக்கு வேண்டிய வரையில் சவுகரியமாக சிறு குடிசை அமைத்துக் கொண்டு கடன்காரர்களுக்கும் கொடுத்து விட்டு பட்டின வாஸத்தை விட்டு விட்டு ஊரோடு போய் விடுவதென்று தீர்மானித்துக் கொண்டான். தான் கால் ஊனத்துடன் வெளியே வருவதா என்ற பெருத்த அவமானம் உண்டாகி விட்டது. உடனே மேற்கூறியவாறு யோசித்தபடியே செய்து முடித்து விட்டான்.

முனிசிபாலிட்டியை ராஜீநாமாச் செய்து விடவும் துணிந்தான். ஆனால் மற்ற அங்கத்தினர்கள் அவன் விலகுவதற்கு சற்றும் சம்மதிக்கவில்லை. இன்னும் சில மாதங்களில் கால் சரியாகிவிடும். சற்று ஊனமானால் பாதகமில்லை. கட்டை வைத்துக் கொண்டு நடக்கும் வரையில் நீ ரஜாவில் இருக்கலாம் நீ விடவே கூடாது'' என்று கட்டாயப் படுத்தியதால் அதற்கு இசைந்து ஊருக்குப் போய் குடியேறி விட்டான்

கிருஷ்ணகுமாரிக்கு உடம்பு குணப்படும் வழியே இல்லை நாளுக்கு நாள் அதிகரித்து சதா நாயைப் போலவே இழுக்கவும் குரைக்கவும் ஆரம்பித்து விட்டதால் குழந்தைகள் அவளருகில் செல்லவும் பயந்தன. குழந்தைகள் அருகில் செல்வதும் திரும்பவும் தகப்பனாரிடம் ஓடி வருவதுமாக விருந்தன. கிராமத்திற்கு வந்த பிறகு குழந்தைகளுக்கு ஒரு கண்காட்சியோ பள்ளிக்கூடமே''! வேறு வேடிக்கைகளோ ஒன்றுமே கிடையாது. குடிசையைப்போன்ற

அவ்வீட்டையும் பெரிய தென்னந்தோப்பையுந் தவிர வேறு போக்கிடமே இல்லை.

குழந்தைகளைத் தனித்து தோப்பில் விடுவதற்கும் சாந்தமூர்த்தி பயந்தான். பகைவர்களால் என்ன நேர்ந்து விடுமோ என்ற பயம் மனத்தில் சதா குடி கொண்டிருந்தது. ஆதலால் தான் கட்டையை ஊன்றி நடந்து வந்து அந்த தோட்டத்து ஒரு பக்கத்தில் உட்கார்ந்திருப்பான். குழந்தைகள் விளையாடுவதைக் காணும் போது மனம் படும் வேதனையைக் கூறவே திறமன்று. தாமும் ஒரு காலத்தில் நடந்து வந்தோமா? அன்றி இப்படியே தான் நொண்டியாகி விட்டோமா! என்ற விசனமும் ஏக்கமும் அவனைக் கொன்று விட்டன.

183000

குழந்தைகளுடன் எழுந்து ஓடி விளையாட மனம் பதைக்கிறது. இனிமேல் அந்த ஆநந்தக் கூத்தடிக்கும் காலம் வருமா...கண்ணைத் திறக்க விடாமல் கண்ணீர் ஆறாய்ப் பெருகுகின்றது. அப்படியே பிணம்போலாகி விட்டாள். தினசரிப் பத்திரிகை மட்டும் ஒன்று வரவழைத்திருந்தான். அந்த பத்திரிகையில் சித்திரக் கண்காட்சி நகரத்தில் மூன்று தினங்களுக்கு நடக்கப் போவதாக ப்ரசுரித்திருந்ததைக் கண்டதும் அவனுடைய துக்கம் பின்னும் ஆயிர மடங்கு அதிகரித்துப் பொங்கி விட்டது. எத்தனை கண்காட்சிகள் தான் கண்டு களித்திருந்தும் இப்போது முடவனாய் ஒன்றுக்கும் உதவாக் கட்டையாய் உட்கார்ந்து விட்ட விசனத்தை அவனால் சகிக்க முடியவில்லை.

சிறு குழந்தையைப்போல் விம்மி விம்மி யழுது சோர்ந்து விட்டான். ஆற்றுவாருண்டா, தேற்றுவாருண்டா! தனிக் கட்டை...... அனாதை போலாகிவிட்டான். சற்று நேரம் ஒன்றுமே தோன்றாது மிகவும இடிந்துபோய் விட்டான். பிறகு ஆள் மூலம் சொல்லியனுப்பி கிராமத்து முனிசிப்பை வரவழைத்தான். அவரிடம் வெகு பணிவுடன் பேசத் தொடங்கி "ஐயா! எனக்கொரு உபகாரம் செய்வீர்களா?" என்றான்.

முனிசீப்:—என்னப்பா அப்படி கேட்கிருய்? என்னுல் என்ன முடியுமோ அதைச் செய்ய சித்தமாய்க் காத்திருக்கிறேன்; சொல்லப்பா......

சாந்த:—என் கதியை நினைக்க நினைக்க என்னுயிரே போய் விடும் போலிருக்கிறது. எனக்கும் இத்தகைய கதி வரும் என்று கனவில் கூட கருதவில்லை.........என் பாப ஜென்மாவின் பலனுல் குழந்தைகளும் அவஸ்தைப்படுகிறுர்கள். 'என்னப்பா வேடிக்கையே ஒன்னும் இல்லையே! எங்காவது போகலாம் வாயேன்' என்று கூப்பிடும்போது என் வயிற்றைக் கலக்கிச் சங்கடம் செய்கிறது. நகரத்தில் ஏதோ கண்காட்சி காட்டுகிறுர்களாம். அந்த காட்சியையாவது குழந்தைகளுக்குக் காட்டலாமென்று தோன்றுகிறது.

ஐயா! நானே முடவன். உதவாக்கட்டை. தயவு செய்து குழந்தைகளை அழைத்துக்கொண்டு போய் கண்காட்சிச் சாலையில் உள்ள விநோதங்களைக் காட்டி விட்டு வருகிறீர்களா! இந்த உதவி செய்தால் போதும். வேறு யாரையும் நம்பி குழந்தைகளை யனுப்ப மனம் துணிய வில்லை.'' என்று கண்ணீர் பெருகியவாறு கூறினுன்.

இவ்வார்த்தைகள் முனிசீப்பின் மனத்தை உருக்கி விட்டன அவரும் இரக்கமான பார்வையுடனும் குரலுடனும் பேசத் தொடங்கி ''சாந்தமூர்த்தி!......என்னுடைய மனத்தில் இப்போது செய்யும் வேதனையைக் கூறத் திறமே இல்லை. ஆதியில் நானும் உன் பிதாவும் எப்படி இருந்தோம்!நீ குழந்தையாயிருந்த காலத்தில் உன்னை நான் தூக்கிக் கொண்டு சுமந்து விளையாடியதை நினைத்தால், இப்போது நீ இருக்கும் நிலைமையை என்னுல் கண்டு சகிக்கவே முடியவில்லை. எல்லாம் காலத்தின் கோலம், வேளையின் பயன். இதற்கென்னப்பா இத்தனை கெஞ்சல்?

என்னுடைய பெரிய ரெட்டை மாட்டு வண்டியை நாளை விடியற் காலம் கட்டிக்கொண்டு கையில் ஆகாரத்தையும் தயார் செய்து கொண்டு போவோம்; நீயும் வா. வண்டியை விட்டு இறங்கவே வேண்டாம். வண்டியிலேயே இரு. நான் குழந்தைகளை அழைத்துச் சென்று சித்திரக் காட்சி, கண் காட்சி இரண்டையும் பார்த்துவிட்டு

முடிந்தால் சினிமாவும் குழந்தைகளுக்குக் காட்டிவிட்டு வருவோம். இதனால் நீ கவலைப்படாதே. என் மனைவியை வேண்டுமானால் இங்கு வந்து உன் மனைவியைப் பார்த்துக்கொள்ளச் சொல்கிறேன்'' என்று பரிந்து கனிவுடன் கூறினர்.

சாந்தமூர்த்திக்கு தான் செல்வதற்கு மிகவும் அஞ்சிகையாக விருந்தது; எனினும் இங்கு வந்து அடைபட்டுவிட்டதானது மன திற்கு நிரம்பவும் வெறுப்பாயும் சங்கடமாயுமிருந்ததால் போய் வருவதென்று தீர்மானித்துக்கொண்டான். ஆகாரங்களையும் தயார் செய்துகொண்டு மறுநாள் விடியற்காலம் பின் நிலாவில் 4 மணி சுமாருக்குக் குழந்தைகளுடன் புறப்பட்டார்கள். வழியில் ஒரு ஏரிக் கரையில் இறங்கி தாங்கள் கொண்டுவந்திருந்த ஆகாரத்தைக் குழந்தைகளுக்கும் கொடுத்து அவர்களும் ஆநந்தமாக ஜலக்கரை யிலுள்ள ஒரு மரத்து நிழலில் உட்கார்ந்து சாப்பிட்டார்கள்.

எத்தனையோ சுமை வண்டிக்காரர்களும் வழிப்போக்கர்களும் தம்தம் கட்டுசாதத்து மூட்டையை அவிழ்த்து சந்தோஷமாகத் தின்று, பின் வெத்திலே போட்டுக்கொண்டு சற்று இளைப்பாறிப் பின்னர் வண்டி கட்டினர்கள்.

நமது சாந்தமூர்த்தியும் குழந்தைகளும் இந்த ஆனந்தத்தைக் கண்டு சந்தோஷப்பட்டவாறு மரத்தடியில் உட்கார்ந்திருந்தார்கள். குழந்தைகள் கொம்மாளமடித்து விளையாடி மகிழ்ந்து பின்னர் அப்ப டியே சற்று அசைவற்றுத் தூங்கிவிட்டார்கள்.

மீண்டும் வண்டியைக் கட்டிக்கொண்டு ப்ரயாணமாகி நேரே மூன்று மணி சுமாருக்கு சித்திரக் காட்சிச் சாலைக்கு வந்தார்கள். சாந்தமூர்த்தி வண்டியிலேயே மனக்கலக்கத்துடன் அமர்ந்திருந் தான். வீதியில் ;கூறத்திறமற்ற வண்டிகளும், மோட்டார்களும் நின்றிருந்தன. முனிசிப்பு குழந்தைகளுடன் இறங்கினர். சாந்த மூர்த்தி வண்டியுடன் வேறு ஒரு தனித்த மறைவான இடத்திற்குச் சென்று தங்கி இருப்பதாயும், அங்கு வரும்படியும் முனிசிப்பிடம் தெரிவித்துவிட்டுச் சென்றான்.

முனிசிப்பு குழந்தைகளை அழைத்துக்கொண்டு உள்ளே சென்றார். அந்த சாலையில் முற்றும் சித்திரங்களே நிறைந்திருந்தன. பலவித வர்ணப் படங்கள், இயற்கையின் தோற்றப்படங்கள், கடவுளின் லீலாவினோதப்படங்கள் கற்பனாலங்காரங்களால் சிறந்த படங்கள் இவைபோன்ற பலவிதமான படங்கள் ஏராளமாக இருந்தன. அப் படங்களை எல்லாம் குழந்தைகள் வெகு ஆநந்தத்துடன் பார்த்துக் களித்தார்கள்.

சற்று தூரத்தில் ஓர் பெரிய படம் மாட்டப்பட்டிருந்தது. அதன் பக்கம் அசாத்யமான கூட்டம் நின்று வேடிக்கை பார்த்து "ஆகா! என்ன அபூர்வமான படம்! எத்தனை அழகாக எழுதப்பட்டிருக்கிறது. அடாடாடா! எத்தனை தைரியம்...எத்தனை நெஞ்சழுத்தம்! என்ன திமிருடன் ஆளைக் கொன்றுவிட்டான்"...என்கிறார்கள் சிலர்.

பின்னும் சிலர்...அடாடா! இதுவா!...சில வருஷங்களுக்கு முன்னர் ஒரு பிச்சைக்காரன்மீது மோட்டாரை ஏற்றிக்கொன்ற சம்பவம் அப்படியே படமாக இருக்கிறதே...இதோ சாந்தமூர்த்தியும் கையில் பக்ஷணங்களை வைத்துக்கொண்டு அப் பிச்சைக்காரக் கிழவனுக்குக் கொடுக்கிறான்...அடுத்தது அவன் சாப்பிடுகிறான்.... அதற்கடுத்தது மோட்டாரின்கீழ் அறைபட்டு மாண்டுவிடுகிறான்! அதற்கடுத்தது அக் கிழவனின் சவ ஊர்வலம்...என்ன ஆச்சரியம்! அன்று சம்பவத்தைக் கவனித்துக்கொண்டிருந்து இதை யாரோ எழுதி இருக்கிறார்கள்" என்று பெயரைப் பார்த்தார்கள் "மோகன் தாஸ்" என்று வரையப்பட்டிருந்தது.

"இந்த சித்திரக்காரரா! இவர் எழுதிய எத்தனையோ படங்களை சென்ற சித்திரக் காக்ஷியிலும் இதர சஞ்சிகைகளிலும் பார்த்திருக்கிறேன். இவர் பெரிய சித்திரக்காரராயிற்றே!" என்று சிலர் பேசிக்கொண்டார்கள் சாந்தமூர்த்தியின் குழந்தைகள் அப் படத்தருகில் வந்ததும் "அதோ! எங்கப்பா! எங்கப்பா! மாமா! அதோ பாரு...எங்கப்பா!" என்று ஆரவாரம் செய்தார்கள்.

அதே கூட்டத்தில், அதே படத்தின் மற்றொரு புறம், மிகவும் மெலிந்துபோய் அடையாளமே தெரியமுடியாத நிலைமையில்

வஸந்தகுமாரியும், அவளுடைய அண்ணனும், அவன் மனைவியும் வந்தார்கள். வஸந்தகுமாரிக்குப் படத்தைப் பார்த்ததும் திடீரென்று ஒரு ஷாக் அடித்ததுபோல் தள்ளியது. அதே நிமிடம் குலசேகரனும் அவன் மனைவியும் அதைப் பார்த்து தங்களை மீறி மிரண்டு போய் தீயை மிதித்தவர்கள்போல் துள்ளினார்கள். காரணம் குற்றமுள்ள நெஞ்சுக்கல்லவோ குறுகுறு என்று வேதனை தெரியும்.

குலசேகரன் அவன் மனைவியின் முகத்தைப் பார்க்கிறான். மனைவி புருஷனின் முகத்தைப் பார்க்கிறாள். வெயர்வை குபீரென்று கால் முதல் தலை வரையில் வழிகிறது. இதயத்திற்குள் சித்திரவதை செய்கிறது. அந்தப் படத்தைப் பார்க்கிறாள். முகத்தில் எதோ விபரீதக் களை தாண்டவமாடுகிறது. தத்தளித்தபடியே அதை உற்று உற்று கவனித்தாள். மோட்டாரில் உள்ள மனிதர்களை மட்டும் இன்னாரென்று கூற முடியவில்லை எனினும் ஒரு ஆணுருவமும் பெண்ணுருவமும் மட்டும் தெரிகிறது. இந்த மோட்டாரைப் பார்த்து கிழவனின் ஆவி தனியே அந்தரத்தில் நின்று இவர்களை சபிப்பதுபோன்றும், கடவுள் இதை மேலிருந்து பார்த்து முகத்தைச் சுளித்து கையை நீட்டிச் சாபமிடுவதுபோலும் சித்திரக்காரன் வெகு தெளிவாக வரைந்திருந்தான்.

குலசேகரன் சக்குவின் காதோடு "என்ன விபரீதம் பார்த்தாயா! நல்லவேளை காரின் உள்ளே இருக்கும் உருவங்கள் அடையாளம் தெரியவில்லை. தெரிந்திருக்குமாயின் நம் கதி என்னாகும்? இதை எந்த படுபாவியோ பார்த்திருந்து வேண்டுமென்றே எழுதி இருக்கிறான். அதோ அந்த கட்டைத்தடியன் சாந்தமூர்த்தியும் நிற்கிறானே!''...என்றான். சக்குபாயும் "இங்கு நாம் நின்றால் நமது முகத்தைக் கண்டே யாராவது சந்தேகமோ, இன்றி வேறு வித்யாசமாகவோ எண்ணிவிடுவார்கள். ஆகையால் பார்த்துக்கொண்டே போய் விடுவோம்'' என்றாள். அதைப் பார்த்தபடியே அடுத்த படத்தருகில் நழுவியவாறு "ஏன் சக்கு! உன் உடம்பு இப்படி கிடுகிடு என்று நடுங்குகிறது. ஏன்? பயப்படுகிறாயா?'' என்றான்.

சக்கு :—ஆம். என்னை ஏதோ ஒருவிதமான வேதனை பிடித்து வாட்டுகிறது. அன்று நீங்கள் உங்கள் தாயார் இறக்குந்தறுவாயி

லிருந்தும் என்னை ப்ரீதியுடன் வழக்கம்போல் சந்தித்து அழைத்துச் சென்று என் வீட்டில் விட்டபோது அதை யோர் உயர்வாயும் பெரிய அன்பாயும், ஆநந்தமாயும் எண்ணினேன். அந்த திமிர் பிடித்த நிலைமையில் நீங்கள் காரை கிழவன்மீது ஏத்திக்கொண்டு போனது ஒருவாறு தெரிந்ததேயன்றி அத்தனை பாதிக்கவில்லை. இன்று இதை நேரில் பார்க்கும்போதுதான் என்னையறியாது சித்திரவதை செய்கிறது. கிழவனின் ஆவி நம்மை சபித்துவிட்டது போலவே தோன்றுகிறது ... ஆ...அது கொலைதானே ... நாம் குடித்துவிட்டுத் திரிந்த மோக வெறியில் தலைகால் தெரியாமல் செய்த கொலைதானே...ஆம்...ஆம்...கொலைதான்...கொலைதான்... கொலை...என்று ஒருவிதமான பீதியுடன் பிதற்ற வாரம்பித்துவிட்டாள்.

குலசேகரனுக்கு இவள் நிலைமையைப் பார்த்ததும் பயம் பிடித்துவிட்டது. உடனே அவன் அவளை அங்கு வைக்கக்கூடாதென்ற நோக்கத்துடன் வஸந்தகுமாரியை நோக்கி "வஸந்தா! மன்னிக்கு தலை சுற்றுகிறதாம். வீட்டுக்குப் போகலாம் வா! என்ன பார்வை இந்த படத்தை?" என்று சற்று அதிகாரத்துடன் கூறினன் என்றுமில்லாத தைரியத்துடன் வஸந்தா..."என்ன அண்ணு! நான் இன்னும் பல படங்கள் பார்க்கவே இல்லையே...நீ அவளை அழைத்துக்கொண்டுபோய் பிறகு வண்டியை அனுப்பு; நான் இவைகளைப் பார்த்துவிட்டு வருகிறேன்.'' என்று கூறிவிட்டாள்.

பொது இடத்தில் இதற்குமேல் தர்க்கம் செய்வதும் அழகல்ல. சக்குபாயை உடனே இடத்தைவிட்டு மாற்றிவிடவேண்டும். ஆகையினுல் நிற்கலாகாது'' என்று போய்விட்டான். வஸந்தகுமாரி கிழவனின் வாயிலிருந்து "வாழ்வாவது மாயம் மண்ணுவது திண்ணம்!...இப்பவோ, பின்னையோ, சற்று நேரத்திலோ! என்ற பாக்களைப் பாடுவதுபோல் சித்திரக்காரன் வரைந்திருந்ததைப் பார்த்ததும் தன் தாயின் மரணத்தறுவாயில் இதே கிழவன் பாடிப் பிச்சையெடுத்த ஒவ்வொன்றும் கண்முன்பு தோன்றிவிட்டது. சாந்தமூர்த்தி நிற்பதைக் காண மனம் சற்று வெறுத்தது.

எந்த படுபாவிகள் இம் மாதிரி செய்தார்களோ!...ஆ...என் அன்னை இறந்த அதே தேதியில், அதே இரவில் இச் சம்பவம் நடந்ததாயும், இப் படத்திற்கு முதல் பரிசு 500 ரூபாய் கொடுத்திருப்பதாயும் இது மேல் நாடுகளுக்கெல்லாம் போயிருக்கிறதென்றும் எழுதி இருக்கிறதே...“மோகன்தாஸ்”...என்ன கைத்திறமை என்ன சாமர்த்தியம்...என்று வியப்புக் கடலில் மூழ்கி பார்த்துக் கொண்டிருக்கையில் தான் சாந்தமூர்த்தியின் குழந்தைகள் “அதோ எங்கப்பா! எங்கப்பா!” வென்று ஆரவாரம் செய்துகொண்டு நின்றதை வஸந்தகுமாரி சடக்கென்று கவனித்துவிட்டாள்.

அப்பா! என்று கூறியதும் இவைகள் தன் சகோதரியின் குழந்தைகள் என்று தெரிந்துவிட்டது. சில வருடங்களுக்கு முன்பு இதே பெரிய குழந்தையை கண்காட்சியில் பார்த்தபோது இருந்ததற்கு இப்போது முற்றிலும் மாறுபட்டு இளைத்துப்போய் கேவலம் ஏழைகளின் குழந்தை என்று கூறுமலேயே விளங்கும்படி இருந்தது. ஒரு பெண் குழந்தையும் இரு ஆண் குழந்தைகளும் வரிசையாக தங்கள் பிதாவைப் பார்த்த சந்தோஷத்தில் சொக்கி ஆரவாரிக்கும் காட்சி அவள் மனத்தைத் துளாவியது.

சாந்தமூர்த்தியாவது கிருஷ்ணகுமாரியாவது இருக்கிறார்களா வென்று சுற்று முற்றும் பார்த்தாள். ஒருவருமில்லை. குழந்தைகளைக் கட்டியணைத்து முத்தமிட ஆசை மனத்தைப் பிளந்துவிட்டது. அவளால் அதையடக்கவே முடியவில்லை. குலசேகரனும் வீட்டுக்குப் போய்விட்டது மிக்க சந்தோஷமாகவே தோன்றியது. தான் நேரே பெரிய குழந்தை இருந்த இடத்திற்குத் தாவிச் சென்று அக் குழந்தையின் இரு கரங்களையும் பற்றிக்கொண்டு தன்னுவலின் மிகுதியால் முதலில் மூன்று குழந்தைகளையும் அவைகள் திணறும்படிக் கட்டி முத்தமிட்டாள். பின்னர் பெரிய குழந்தையை நோக்கி “பாப்பா! உங்களை யார் அழைத்துவந்தார்கள்?” என்று கேட்டாள்.

இவளை என்றுமே பார்த்தறியாத குழந்தைகள் ஒன்றோடொன்று முகத்தைப் பார்ப்பதும், இவளைத் திரும்பித் திரும்பி பார்த்து நகருவதுமாக ஆரம்பித்தன. மீண்டும் வஸந்தகுமாரி

குழந்தைகளை நோக்கி "பாப்பா! ஏன் பார்க்கிறீர்கள்? உங்களுக்கு நான் மிகவும் புதியவள். இருந்தாலும் உங்கம்மாவுக்கு நான் வெகு வெகு பழகியவள். கண்மணிகளே! உங்களை யார் அழைத்து வந்தார்கள் சொல்லுங்கள். உங்கப்பா, அம்மா எங்கே?" என்று கொஞ்லாகக் கேட்டாள்.

படத்தையே பார்த்து லயித்துப்போயிருந்த முனிசீப்பு சிறிது நேரங்கழித்தே இந்த குழந்தைகளை வஸந்தா கட்டியணைத்திருப்பதைப் பார்த்தார். குழந்தைகள் பதிலே பேசாமல் விழிக்கிறார்கள். ஒருவிதமான சங்கோஜமும் அவர்களின் முகத்தில் ஜொலித்தன. அதைக்கண்ட முனிசீப்பு தாமாகவே பதில் கூற முன் வந்து "அம்மா! தாங்கள் யாரோ தெரியவில்லை. குழந்தைகளை நான்தான் அழைத்துவந்தேன். தாங்கள் குழந்தைகளிடம் காட்டும் கடும் பிரியத்தை நோக்கினால் நீங்கள் இவர்களுக்கு ஆப்தமானவர்கள் என்று தெரிகின்றது. குழந்தைகளின் கதியும் பெற்றோரின் நிலைமையும் தெரிந்திருக்குமல்லவா!" என்றார்.

இதைக் கேட்டபோதே அவளுக்கு மனத்திற்குள் திக்கென்று தூக்கி வாரிப்போட்டது. தான் இன்னாரென்று சொல்லாமலிருப்பதுதான் நலம் என்று தோன்றியதால் "ஐயா! நான் இவர்களின் தாயாருடன் பள்ளிக்கூடத்தில் வருடக்கணக்கில் ஒன்றாகப் படித்தவள். பிறகு நான் என் பிதாவுடன் வெளியூருக்குப் போய் விட்டேன். அதற்கப்புறம் அவர்களைப் பார்க்கவே இல்லை. இங்கு யாரோ, இக் குழந்தைகள் கிருஷ்ணகுமாரியின் குழந்தைகள் என்று கூறினார்கள். பழய பாசத்தினால் ஒடி வந்தேன். இவர்களுக்கு என்ன நிலைமை என்று எனக்குத் தெரியாது......கிருஷ்ணா வரவில்லையா? அவள் புருஷனும் வரவில்லையா!" என்று வெகு அன்பாகவும், உண்மைபோன்றும் கேட்டாள்.

இதைக் கேட்ட முனிசீப்பு இவளை என்றுமே பார்த்தறிய மாட்டார். ஆதலால் இவள் கூறுவதை நம்பி பேசத்தொடங்கி "அம்மணீ! இவர்களது பெற்றோர்களின் சரிதை ஓர் நாவல்போல் இருக்கும். இதைக் கேட்டவர்கள் கண்ணீர் வடிப்பார்கள். சாந்த

மூர்த்தி என்றால் அவனுக்கே செல்லும். (கல்யாணம் முதல் இன்று வரையில் நடந்தவைகளைக் கூறி) இப்படியும் அநியாயம் நடக்க முடியுமா! மனிதருக்கு மனிதர் காட்டும் ஜீவகாருண்யமும் அந்தச் சண்டாள படுபாவிகளுக்கு இல்லாது போய்விட்டதே...கிருஷ்ண குமாரியின் நிலைமை இவ்விதமிருக்கிறது. சாந்தமூர்த்தியின் காலையே ஒடித்து நொண்டியாக்கிவிட்டார்களம்மா! அந்த வயிற்றெரிச்சலைத் தான் சகிக்க முடியல்லே......அவன் மன்மத வடிவம்போல் இருந்த காலம் மறைந்து இப்போது கட்டை வைத்துக்கொண்டு நடக்கும் பரிதாபம் இருக்கிறதே. இதைப் பார்க்கும்போது வயிறு பற்றி எரிகிறது. அவன் பெற்றோர்கள் இருந்தால் உயிரே விட்டிருப் பார்கள்......

என்று முடிப்பதற்குள் "என்ன! என்ன! கிருஷ்ணகுமாரியின் அண்ணனேயா நாயை விட்டுக் கடிக்கச்செய்தான்!...சாந்தமூர்த்தி யின் கால் ஒடிந்துவிட்டதா!...ஐயையோ! அநியாயமே...இத்தனைக் கும் ஆதி காரணம் ஏழை, பணக்காரர் என்றதும் தேர்தலுந்தானா ...கட்டை பிடித்துக்கொண்டா அவர் நடக்கிறார்? இதைக் கேட்கும் போதே உள்ளம் கொதிக்கிறதே...இப்படிப்பட்ட அலங்கோலத்தில் இவர்கள் இருக்கிறார்கள் என்றதே எங்களுக்குத் தெரியாதே...... என்று தத்தளித்தாள். உண்மையில் வஸந்தகுமாரிக்கு இவ் விரு விஷயங்களும் இன்றே புதிதாகையால் பெரிய ஷாக்கு அடித்து விட்டது.

முனிசீ :—அம்மணீ! இவைகளைக் கேட்கும்போதே நீங்கள் இப்படி கண்ணீர் விடுகிறீர்களே...அவர்களை நேரில் பார்த்தால் என்ன விதம் தவிப்பீர்களோ! குழந்தைகளை கவனிப்பார் இல்லை. கிருஷ்ணா படுக்கையோடு படுக்கையாக ஆய்விட்டாள். அவனோ நொண்டி. கட்டையை வைத்துக்கொண்டு நடந்தபடியே குழந்தை களைத் தானே குளிப்பாட்டி, தானே சாப்பாட்டைக் கலந்து ஊட்டித் தானே விதியை எண்ணிக் கண்ணீர் விட்டபடியே தூங்கச் செய்கிறான். ஒரு கிழட்டுப் பிணம் வேலைக்கிருக்கிறது. இவ் வருடப் தானியமும் எரிந்து பெரிய நஷ்டம் வந்துவிட்டதால் நான் இரண்டு வண்டி நெல்லு கடன் கொடுத்திருக்கிறேன். அதை

வைத்துக்கொண்டு ஜீவனம் செய்கிறார்கள். எத்தனையோ அருமையாயும் கம்பீரமாயும் பிழைத்து வந்தவர்களின் கதி சம்மந்தம் செய்த படுபாவிகளினாலேயே இப்படியாகிவிட்டதென்றால் இதைவிட சங்கடம் வேறு உண்டா! இந்த குழந்தைகள் எத்தனையோ புஷ்டியாயும் அழகாயும் இருந்தார்கள். இப்போது இவர்களின் கண்ராவியைக் காண முடியவில்லை. பார்த்துக் கவனிப்பாரில்லாமையினால் இதோடு பிறந்த ரெட்டைக் குழந்தையில் ஒன்று இறந்துவிட்டது. ஊம்...எல்லாம் விதி

வஸந்தகுமாரிக்கு வயதும் அனுபவமும் அதிகமில்லை எனினும் உடன்பிறந்த பாசமும், வாஞ்சையும், அவளைப் பிடித்தாட்டி வதை செய்கின்றன. தான் இன்னாரென்று சொல்லிவிடலாமா வென்று மனம் பதைக்கிறது. சொல்லிவிட்டால் அது அழகல்லவென்று மீண்டும் தன்னைத் தானே தைரியம் செய்துகொண்டாள். குழந்தைகளை மாறி மாறி முத்தமிட்டுக் கட்டியணைத்து ஆநந்தப் பூரிதமடைந்தாள். மூன்று வயதுடைய ஆண்குழந்தை வஸந்தாவைத் தடவியவாறு "நீ யாரு...என் அயரே? என்று கேட்ட மழலைச் சொல்லின் ஆநந்தத்தை அவளால் தாங்கவே முடியவில்லை. குழந்தையின் மூச்சு திணறும்படிக் கட்டியணைத்து முத்தமிட்டு "கண்ணே! உன் பெயரென்னடா?" என்று வெகு ஆழ்ந்த அன்புடன் கேட்டாள்.

குழந்தை மழலை மொழியில் "என்னு பேரு ராமுகுட்டி. என்னு அண்ணு பேரு சோமுகுட்டி. எங்கக்கா பேரு ஏமலதா.... என் தம்பி செத்துப்பூட்டானே அவன் பேரு லச்சுமணகுட்டி... என் குட்டி தம்பி பேரு பாபுகுட்டி...எங்கம்மா பேரு அம்மா...... அப்பா பேரு அப்பா......என்று வெகு பழகினவர்களிடம் பேசுவதுபோல் பேசியது. பெரிய குழந்தைகள் இதைப் பார்த்துச் சிரித்துக்கொண்டே இருந்தார்கள்.

வஸந்தகுமாரிக்கு இத்தனை நேரம் சென்றது நேரமே தெரியவில்லை. மணியைப் பார்த்தாள். 5 அடித்துவிட்டது கண்டு "ஐயோ! வீட்டில் எமன்கள் இருக்கிறார்களே...சீக்கிரம் போகவேண்டுமே என்ற பயம் உண்டாகிவிட்டது. தன் பையிலிருந்து மூன்று 5

ரூபாய் நோட்டுக்களை எடுத்து அதை மூன்று குழந்தைகளுக்கும் கொடுத்தாள்; பெரிய குழந்தைகள் வாங்கிக்கொள்ளத் தியங்கி



னார்கள். சிறிய குழந்தை சடக்கென்று வாங்கிக்கொண்டு "மாமீ... இது எதுக்கு...என்ன வாங்கலாம்...என்றது.

வஸ :—கண்ணே...சொக்காயி வாங்கலாம். பிஸ்கோத்து பப்ரெமெண்டு, இன்னும் பொம்மெ எல்லாம் வாங்கலாம்.

"எல்லாம் இந்த கடுதாசிலே வருமோ?"...என்று பெரிய ஆண் குழந்தை கேட்டது.

அந்த வார்த்தையைக் கேட்ட வஸந்தகுமாரியின் உள்ளம் பூரித்தது. "பேஷா வருண்டா! என் செல்வங்களே! என் கண்ணல்ல...இந்தா எடுத்துக்கோ" என்று ஒவ்வொரு குழந்தையின் கையிலும் கொடுத்து, லதாவை நோக்கி "லதா! இதை உன் தாயாரிடம் கொடு" என்று கூறி இரண்டு 10 ரூபாய் நோட்டுக்களைக் கொடுத்தாள்.

லதா வாங்குவதற்குத் தியங்கினள். பிறகு முனிசிப்பு லதாவை நோக்கி "அம்மா! வாங்கிக்கொள்ளு. உன் தாயாரின் ஆப்த சினேகிதையான இந்தம்மாளின் மனதுக்கு வருத்தம் உண்டாக்க வேண்டாம்...வஸந்தாவை நோக்கி, "அம்மணீ! தங்களிடம் இத்தனை நேரம் பேசியும் தங்கள் பெயரும் விலாசமும் கேட்க வில்லையே! கிருஷ்ணுவிடம் இதை யார் கொடுத்ததாகக் கூறுவது?" என்ருர்.

வஸந் :—ஐயா! அதெல்லாம் ஒன்றும் கூறவேண்டாம்...... நான் என்ன பிரமாதமாகக் கொடுத்துவிட்டேன். இதை ஒரு ஜம்பமாகக் கூறவேண்டுமா! பரவாயில்லை...கண்மணிகளே!......நான் போய் வரட்டுமா!...அம்மாவிடம்...இல்லை...ஒன்றுமில்லை...என்று கூறி மீண்டும் கட்டியணைத்தும், முத்தமிட்டும் பின்னர் கண்ணீர் வடித்தவாறே அப் படத்தையும் கடைசி முறையாகப் பார்த்து விட்டுக் கும்பலில் மறைந்துவிட்டாள்.

அவளுடைய சடலம் ஏதோ நடக்கிறதே யன்றி இதயம் வெடித்துவிடும் போலாகி விட்டது......"என்ன அனியாயம்...... நாயை ஏவியா கடிக்கச் செய்தான்! வீட்டில் தீ மூட்டியா நாசம் செய்தான்...அந்தோ! அம்மனிதன் சோதாவோ, அயோக்கியனே

அவன் பாட்டிலிருந்தவனைக் காலையுடைத்து நொண்டியாகவா செய்துவிட்டான்...ஐயோ! கடவுளே...இந்த அக்ரமத்தை நீ எப்படித்தான் சகித்துக்கொண்டிருக்கிறாய்? ஏ பூமாதேவி!...இத்தனை கொடிய மக்களை நீ எப்படித்தான் சுமந்து நிற்கிறாய்...ஐயோ! என் நெஞ்சு பதறுகின்றதே. வயிறு பற்றி எரிகிறது.

எத்தனை அக்ரமங்கள் செய்துதான் அடைந்த பலன் யாது? கம்ஸனின் கதி என்னவாயது...ராவணனின் நிலைமை எப்படி முடிந்தது...துர்யோதனாதிகளின் வம்சம் எவ்வாறு சிதறுண்டது! அக்ரமத்தின் முடிவு அதோகதிதான் என்று காட்டிவிடவில்லையா? கடவுளின் சகாயம் நேருக்கு நேர் இருந்த அக் காலையிலேயே அனியாயத்தின் பலன் கைம்மேல் கிடைத்துவிட்டது.

இக் கலியில் மட்டும் அனியாயம் நியாயமான பலனை எப்படிக் கொடுக்கும்? கஜகர்ணம் போட்டும் கடைசியில் அடைந்த பலன் தோல்வியல்லவா...சிச்சீ!... இப் பாதகனும் ஓர் உயர்ந்த மனித வர்க்கம் என்று சொல்லிக்கொள்ளும் பவிஷு பெற்றவனா?...மிருகம்! ...எந்த நாயை ஏவி கடிக்கச் செய்தானோ, அந்த நாயினும் கடையவனல்லவா அவன்...ஹா ... என்ன செய்வேன்?'' என்று கண்ணீர் விட்டுக் கலங்கியபடியே தூரத்தில் நின்று மீண்டும் குழந்தைகளைப் பார்த்தாள். அவர்களைப் பிரியவே மனம் சகிக்கவில்லை. எட்டி எட்டிப் பார்த்தபடியே நடைச்சவம் போல் வந்து காரில் அமர்ந்தாள் வண்டியில் அப்படியே சாய்ந்து சோர்ந்துவிட்டாள்.


## இன்பஜோதி
### அல்லது
## பிள்ளை வீட்டாரின் கொள்ளை

சென்ற வருடம் இரண்டு கொழுத்த பணக்காரர்களிடையே வரதக்ஷிணைப் பேய் தாண்டவ மாடிக்கொண்டிருந்த சமயம், இப் புத்தகம் அவர்களிடம் சென்று, பேயை ஓட்டி விமரிசையாக விவாகத்தை நடத்தி வைத்த பெருமை வாய்ந்தது.

விலை ரூ. 1/4

## 12-வது அதிகாரம்

### குழம்பிய குடும்பம்—கொந்தளிக்கும் பாசம்

குழந்தைகளை உள்ளே யனுப்பிவிட்டு வண்டியோடு வண்டியாய் கண்ணீர் பெருக உட்கார்ந்திருந்த சாந்தமூர்த்தி சுற்று முற்றும் பார்த்துக் கொண்டே இருந்தான். சித்திரக்காட்சியைப் பார்த்து விட்டுச் செல்லும் ஜனங்கள் அதில் யார் யாருக்கு எதெது பிடித்ததோ அதைப் பற்றிப் புகழ்ந்து பேசிக் கொண்டே சென்ற வார்த்தைகள் சாந்தமூர்த்தியின் செவியில் விழாமலில்லை.

"என்ன அழகான படம்......சாந்தமூர்த்தியும் அப்படியே அப்படத்தில் நிற்பது தத்ரூபமாயிருக்கிறதே......அதைப் பார்த்த உடனே எனக்குப் பழைய சம்பவங்கள் முற்றும் ஞாபகத்திற்கு வந்து விட்டன. ஊம். சாந்தமூர்த்தியின் கதிதான் அதோகதியாகி விட்டதே!''......என்று முன்பு சாந்தமூர்த்தியின் பக்கத்து வீட்டில் குடியிருந்த இருவர் பேசிக் கொண்டு வண்டியின் பக்கத்தில் செல்கையில் சாந்தமூர்த்தியைப் பார்த்து விட்டார்கள்

உடனே......"ஹா......சாந்தமூர்த்தியா.........ஏன் இங்கு உட்கார்ந்திருக்கிறாய்......இப்போதுதான் உன்னைப் பற்றிப் பேசிக் கொண்டே வரோம்......உனக்கு கால் எப்படி இருக்கிறது? நடக்க முடிகிறதா......குழந்தைகள் சுகமா''......என்று அடுக்கடுக்காய்க் கேட்டார்கள்.

சாந்:—என்னைப் பற்றியா பேசினீர்கள்? என்ன சமாச்சாரம்... கால் இன்னும் குணமில்லை. கட்டு கட்டி இருக்கிறது. நீங்கள் எல்லாம் சுகந்தானே......

வந்த:—ஆகா! சுகந்தான்......சித்திரசாலையில் ஒரு அருமை யான படம்—யாரோ மோகன்தாஸ் எழுதியதாம்—வைத்திருக் கிறது. அதில் சில வருடங்களுக்கு முன்பு நம் வீட்டு வாசலிலே ஒரு பிச்சைக்காரக் கிழவன் மேல் மோட்டார் ஏறிவிட்டது பாரு. அந்த சீனை அப்படியே தனித்தனியே எழுதி பெரிய படமாகச் செய்து வைத்திருக்கிறது. நீ அந்த பிச்சைக்காரனுக்கு பக்ஷணம் கொடுத்தாய் பாரு, அது கூட அப்படியே அதில் தத்ரூபமாக இருக் கிறது. அதைப் பார்த்ததும் கூறத் திறமற்ற வியப்பு உண்டாகி விட்டது.

உடன் வந்த மற்றவன் "எனக்கு வியப்பில்லை. இந்தப் படம் வரும் என்று எனக்கு முன்பே தெரியும். மோகன்தாஸ் என்ற சித்ரக் காரர் ஓர் ஆளை அனுப்பி இந்த சம்பவம் நடந்த விவரத்தை சுருக்க மாக விசாரித்து எழுதிக்கொண்டு வரும்படிச் சொல்லி இருந்தார். நான்தான் சகல விவரங்களுக்கும் குறிப்பு கொடுத்தேன். சாந்த மூர்த்தியின் புகைப் படத்தையும் கொடுத்தேன். அப்போது கூட இத்தனை அழகாக இருக்கும் என்று நான் எதிர்பார்க்கவே இல்லை. அதைப் பார்க்காத கண்ணும் கண்ணா என்று இப்போது தோன்று கிறது'' என்றான்.

இதைக் கேட்கும்போதே மூர்த்தியின் மனதில் ஒருவித ஆவ லும், தவிப்பும், துக்கமும் வந்து விட்டன......"அப்பா! நீ என் பக் கத்து வீட்டுக்காரனா! இருந்தும் என்னைக் கலக்காமல், எனக்குத் தெரி யாமல் நீ என் படத்தைக் கொடுத்து இப்படி வரும்படியாகச் செய்ய லாமா! இது சரியா! இப்போது என்னை நொண்டியாகப் பார்த் துப் படத்தையும் பார்த்தால் எல்லோரும் சிரிக்கமாட்டார்களா? இது என்ன காரியம் செய்து விட்டாய்?......எவனோ எழுதி சம்பா திப்பதற்கு நான்தான் அகப்பட்டேனா? எனக்கு இது மிகவும் துக்க மாக இருக்கிறது.'' என்று சற்று கடிந்தாற் போலவே கூறினான்

இது கேட்ட அம்மனிதன் அசந்து விட்டான்..."மூர்த்தி... எனக்கு இத்தனை தூரம் ஒன்றுமே தெரியாது. நான் ஏதோ விளை யாட்டாயும் பெருமையாயும் எண்ணிக் கொடுத்து விட்டேன்.

அதோடு நீ ஒன்றும் வித்யாசமாகத் திட்டமாட்டாய் என்று நம்பித் துணிந்து செய்து விட்டேன். மன்னிக்க வேண்டும். ஆனால் நீ நினைப்பதுபோல் உனக்கு ஒருவிதமான அவமானமோ, அபவாதமோ அதனால் உண்டாகவே உண்டாகாது. அப்படத்தைப் பார்த்த ஒவ்வொருவரும் எத்தனை சந்தோஷத்துடன் பேசுகிறார்கள் தெரியுமா? நீ இப்போது எப்படியாவது அங்குச் சென்று மெல்ல பார்த்துவிட்டுத் தான் போக வேண்டும். அதைப் பார்த்தால் நீயே ஆச்சரியப் படுவாய். நான் இதைக் கொடுத்ததற்கு இன்னொரு காரணமும் உண்டு. ஒன்று ஒரே சமயத்தில் ஒரே கிழவனுக்கு ஒரு இடத்தில் மனம் இரங்கி ஒருவன் உணவளித்தான்; அதே க்ஷணத்தில் மனிதனென்று பெயர் படைத்த மறலி அவனைக் கொன்று விட்டான். இந்த தத்துவத்தைக் காட்டுவதற்கே கொடுத்தேன்; கோபிக்காதே...... மூர்த்தி! நீயும் நானும் பழைய சினேகிதர்களல்லவா! என்னை மன்னித்து விடு'' என்று வெகு இரங்கியவாறு கேட்டான்.

மூர்த்தி ஒருவிதமாக பார்த்துக் கொண்டே......கோபு! இனிமேல் மன்னிக்காமல் நான் என்ன செய்ய முடியும்? நீங்கள் இத்தனை தடபுடலாகக் கூறுவதிலிருந்து எனக்கும் அதைப் பார்க்கவேண்டுமென்ற ஆவல் உண்டாகிறது. ஊம்......இனி உலகத்தில் எந்த அதிசயம் எப்படி நடந்தால்தான் என்ன! நான் இனி ஒன்றுக்கும் உதவாத நொண்டிதானே''.........என்றபோது கண்ணீர் பெருகி விட்டது.

கோபு மிக்க விசனத்துடன் "மூர்த்தி...இந்த வண்டியோடு அச்சாலையின் வாசற்படி வரையில் வந்துவிடு. ஜனங்களெல்லாம் போய்விட்டார்கள். நீ உள்ளே சென்று பார்த்துவிட்டு வரலாம். அதோ! உன் குழந்தைகளும் ஆரவாரித்துக் கொண்டே ஆனந்தமாக வருகிறார்கள் பாரு'' என்றான். அதே சமயம் ஹேமலதாவும் பெரிய பையனும் "அப்பா, அப்பா!...ஒன்னெ யாரோ படத்துலெ எயுதி இருக்காப்பா! நீ அதுலே ரொம்போ நன்னாயிருக்கேப்பா! நீ அதைப் பாக்க வாப்பா'' என்று கொஞ்சலாகக் கூறின.

மனதில் எத்தனை விரக்தியும், கவலையும் இருந்த போதிலும் எல்லோரும் சொல்வதிலிருந்து தானும் அப்படத்தைப் பார்க்க

வேண்டுமென்ற ஆவல் உண்டாகி விட்டதால் மெல்ல அங்கு சென்றான். கட்டை யூன்றிய படியே உள்ளே அப்படத்தருகில் சென்று பார்க்கும்போது அவனை யறியாத துக்கமும், அன்று கிழவனின் தோற்றமும், பாட்டும், அடுத்த க்ஷணம் மரணமும் கண் முன்பு தோன்றி அதே உணர்ச்சி மனத்தில் உண்டாகி விட்டது.

தன்னுருவத்தைப் பார்த்து வியந்தான். இத்தனை அழகான படத்தை எழுதிய மோகன்தாஸின் திறமையைப் புகழ்ந்து கொண்டாடினன். தத்ரூபக் காட்சியை எப்படித்தான் சித்தரித்தானே வென்று கூறத்திறமற்ற அதிசயத்தினுல் தம்பித்தான். பிறகு வெகு நேரமாகிவிட்டதால் ஊருக்குச் செல்ல வேண்டியதை எண்ணி நண்பர்களிடம் உத்தரவு பெற்றுக் கொண்டு கிளம்பி விட்டான்.

அன்றிரவு வழியிலுள்ள ஓர் சாவடியில் தங்கிவிட்டுப் பிறகு காலையில் ஊருக்குச் செல்வதென்று நிச்சயித்துக் கொண்ட சமயம் குழந்தைகள் வெகு சந்தோஷத்துடன் "அப்பாப்பா!...அம்மாக்கு சினேகிதியாம் ஒத்தி வந்திருந்தா. எங்களுக் கெல்லாம் ரூபாய் கொடுத்தா. அம்மாக்கும் ரூபா குடுத்தா...இதுக்கு சொக்கா, மிட்டாயி, பொம்மை எல்லாம் வாங்கிண்டு போலாம்பா......என்றதும் சாந்தமூர்த்திக்கு வியப்புண்டாகி விட்டது.

முனிசீப்பும் நடந்ததைக் கூறி "பாலிய சினேகிதையாம். பெரிய பணக்காரி வெகு நல்லவள். உங்கள் கதையைக் கேட்டுத் தேம்பித் தேம்பி அழுதாள். பால்யத்தில் பள்ளிக்கூடத்தில் ஒன்றாய் படித்தவளாம்.'' என்றார். இது சாந்தமூர்த்திக்கு இன்னும் வியப்பாகி விட்டது. "பால்யத்தில் பள்ளிக்கூடத்தில் படித்த சினேகிதையானல் இத்தனை வருடங்கழித்து நினைவு வைத்துக் கொண்டு விசாரிப்பதே அரிது. அதோடு ஒன்று, இரண்டா! 35 ரூபாயைத் தூக்கிக் கொடுப்பதென்றால் சாமானியமா...... அது யாரு? அத்தனை தாராள மனத்தை யுடைய தர்ம தாதாக்கள் யாராயிருக்கலாம்? பேர், விலாசம் முதலியன கேட்டீரா?''...என்றான்.

முனி:—கேட்டேன். சொல்லவில்லை. இது ஓர் ப்ரமாதமான உதவியா......என்று கூறிவிட்டு உடனே போய் விட்டார்கள்......

சாந்த:—அப்படியா......பெயர் சொல்வதற்கு ஏன் மறுக்க வேண்டும்? இதில் எனக்கு நம்பிக்கையே கொடுக்கவில்லை. இவைகளி லும் ஏதோ மோசமிருக்குமோவென்று பயமாக விருக்கிறது. நம்மை இத்தனை தூரம் செய்த எதிரிகளே கள்ள நோட்டுக்கள் செய்து இதை நம்மிடம் கொடுத்து இதன் மூலம் இன்னும் அதிக துன்பத்தை விளைவிக்கலாம் என்று கூட எண்ணிச் செய்திருக்க லாம்......நீங்கள் இப்படிப்பட்ட அசடாகவா ஆய்விட்டீர்கள்? யார் எதைக் கொடுத்தாலும் வாங்கிக் கொண்டு விடுவது கேவல மான குணத்தை யல்லவோ காட்டுகிறது "சீச்சீ...மடக் குழந்தை களே......ஏன் ஐயா! நீர் கூடவா வாங்கும்போது தடுக்கவில்லை.

ஹேமலதா:—அப்பா! நான் வாங்கமாட்டேன்னே......இந்த மாமாதான் வாங்கிக்கச் சொன்னுப்பா......எனக்கு ஒன்னுமே தெரி யாது.—என்று வெகு தெளிவாகக் கூறினுள்.

இது கேட்ட சாந்தமூர்த்தி "குழந்தைகளே! போதும். போதும்......நமக்கு நேர்ந்திருக்கும் ஆபத்துக்கள் ஏழேழு பிறவிக் கும் போதும் இது இன்னதென்று புரியவில்லை. இதன் மூலம் நமக்கு நன்மையும் வேண்டாம்; தீமையும் வேண்டாம். இப்படிக் கொடுங்கள். வீட்டிற்குப்போய் அம்மாவிடம் கேட்டுக் கொண்டு பேசாமல் கொளுத்திவிடுவோம். அல்லது வேறு பரிகாரம் தேடு வோம்......சரி......வண்டியை விடப்பா...என்று கூறிக்கொண்டே நோட்டுக்களைத் தானே வாங்கி பையில் போட்டுச் சொருகிக் கொண்டான்.

இவ்வாறு சாந்தமூர்த்தி சொல்லிய பிறகு முனிசீப்புக்கும் சற்று மனக்கலக்கமாகவே ஆய் விட்டது. "அந்த மனுஷி யாரோ, என்னவோ! நாமும் சற்று கூட யோசனை செய்யாமலிருந்து விட் டோமே......என்றைக்கோ சினேகமாக விருந்தால் இன்று வந்து இப்படி பணத்தைக் கொடுப்பாளா! காலம் படுகிற பாட்டில் இதென்ன விநோதமாக வன்றோ விருக்கிறது" என்ற பெருங் குழப்பமும் சந்தேகமும் உண்டாகி விட்டன. வரும்போதிருந்த

மனோ வேகமும் உத்ஸாகமும் இப்போது குழந்தைகளுக்கும் குறைந்து விட்டன.

இரவு சத்திரத்தில் தங்கி விட்டு, விடிந்ததும் ஊர் போய்ச் சேர்ந்தார்கள். சென்ற உடனே கிருஷ்ணகுமாரியிடம் இந்த அதிசயமான விஷயத்தைத் தெரிவித்து "உனக்கு இத்தகைய சினேகிதை யாராவது உண்டா!" என்றான். இது கேட்ட கிருஷ்ணகுமாரிக்கு மிக்க ஆச்சரியமும், சந்தேகமும் உண்டாகி விட்டன. என்னுடன் பாலியத்தில் படித்தவளா!......எத்தனையோ பேர்கள் படித்தார்கள். எத்தனையோ பேர்கள் சினேகிதம் உண்டு. இப்படி பணத்தைக் கொடுத்து உதவக் கூடியவர்கள் எனக்குத் தெரிந்த வரையில் யாரையும் காணவில்லையே......நீங்கள் சொல்வதுபோல் இதில் எனக்கும் சந்தேகமாகவே இருக்கிறது.

குலசேகரனுக்கு விவாகமாகி விட்டதாகப் பத்ரிகையில் பார்த்தோமே...அந்த பெண்ணை விட்டு வேண்டுமென்றே கண்டிப்பாய் செய்திருக்கலாம். ஐயோ! இதுபரியந்தம் பட்ட துன்பங்கள் போதுமே......இன்னும் மிச்ச மிருக்கிறதா!" என்று வருந்தினாள். சாந்தமூர்த்தியும் "இதை அவசரப் பட்டுக் கொளுத்தவோ, மாத்தவோ கூடாது. இதை அப்படியே வைத்திருந்து கள்ள நோட்டுக்கள் யாராவது போடுகிறார்களா வென்பதை ரகஸ்யமாக விசாரித்தறிந்து கொண்டு மேலேயாக வேண்டியதைச் செய்து, அப்படுபாவிகளின் துராக்ருதச் செய்கையாக விருப்பின் காட்டிக் கொடுத்துவிட வேண்டும்" என்று தீர்மானித்துக் கொண்டு அந்த நோட்டுக்களை வெகு ஜாக்ரதையாக பத்திரப்படுத்தி விட்டான்.

குழந்தைகளை விட்டுப் பிரிய மனமில்லாத வஸந்தகுமாரி விசனித்தபடியே வீடு வந்து சேர்ந்தாள். குற்றமுள்ள நெஞ்சுடைய குலசேகரன், அவன் மனைவி ஆகியவர்களின் மனம் ஒருவகையில் தத்தளிக்கிறது. அந்த பரம ரகஸியத்தை வஸந்தா அறியமாட்டாள். வஸந்தவல்லியின் மனவேதனையை—பரிதவிப்பை, குழந்தைகளிடம் கொண்ட பேரன்பை, குலசேகரன்மீது ஏற்பட்ட கடும் வெறுப்பை—யார் அறியக் கூடும்? அதை அவள் மனம் அறியுமே

யன்றி மற்றோர் அறியமாட்டார்கள். ஒரு குழந்தையை வேண்டி உலகமே தவம் செய்கிறது. அத்தகைய அருமையான குழந்தைகளை வருடமொன்றாக பகவான் அளித்தும் அவைகளின் அருமை தெரிந்து காக்க திக்கிருந்தும், திக்கற்றவர்கள் போலாய் விட்டதே...

உடன் பிறப்பாம், உடன் பிறப்பு...மல ஜலங்கள் கூடத்தான் உடன்பிறக்கின்றன. இத்தகைய கிராதக எண்ணமும், த்ரோக சிந்தையும், பசையற்ற இதயத்துடன் தீங்கு செய்யும் பாதகர்களும் உலகில் எங்கேனும் கண்டதுண்டா! கேட்டதுதான் உண்டா! என்ன அக்ரமம்! நாய்க்கடியின் உபத்திரவத்தால் கிருஷ்ணு என்ன வருந்துகிறளோ!...என் மனம் நிலையில் நிற்கவில்லையே...கட்டு மீறித் தவிக்கிறதே......நான் ஏன் இன்று அப்பாழும் சித்திரக் காட்சிக்குச் சென்றேன்......அந்தோ...சற்று நேரமாவது மனம் களித்து வரலாம் என்று சென்ற இடத்தில் மனக்கலக்கமும் ஏக்கமும் அதிகரித்து விட்டதே...

ஆகா...நான் அங்கு சென்றதாலன்றே என்னருமைக் கண்மணிகளைப் பார்த்தேன் ... என்னுருயிர்ச் செல்வங்களை ஆவல் தீரக் கட்டியணைத்து முத்தமிட்டேன். ஐயோ! குழந்தைகளின் பரிதாபம் என் இதயத்தைச் சுற்றிக் கொண்டு விட்டதே...அந்த உணர்ச்சியை என்னுலகற்ற முடியவில்லையே...நான் இதற்குப் பரிகாரம் எவ்வாறு தேடுவேன்?...நானே ஓர் கைதிக்குச் சமமாக விருக்கிறேன். ச்வதந்திரம் இருப்பதாகப் பிறர்களுக்குத் தோற்றமும், எனக்கு அத்தனையும் ஹிம்சையாயும் இருக்கிறது......

நான் என்ன விதமாக அவர்களுக்கு உபசரிப்பேன்? இனி மேல் இந்த ஜன்மாவில் அவர்களை அழைத்தால் தான் இங்கு வருவார்களா? துன்பப் பட்டுச் சாகவும் சந்தோஷமாகத் துணிவார்களே யன்றி இத்தனைக் கொடுமை செய்தவர்களிடம் எங்ஙனம் முகாலோபம் செய்வார்கள்......என் இதயம் தத்தளிக்கிறது......அந்த பாழும் சம்மந்தம் செய்த நாளாக இதே வேதனைக்கேணியாக வன்றே ஆய்விட்டது. முதலில் கனத்த மனஸ்தாபம். இரண்டா

வது, அன்னையின் அகால மரணம்......மூன்றாவது, தந்தையின் தடுமாற்றம். நான்காவது, ஜென்ம பகை. ஐயையோ! நினைக்கும்போதே தேகம் பற்றி எரிகிறதே!...என் செய்வேன்?...

ஹா......கிருஷ்ணா......உன் திரு முகம் நோக்கி எத்தனை யுகங்களாகி விட்டன! அந்த மனிதன் கூறியதிலிருந்து கிருஷ்ணாவை இனி காணவே முடியாதுபோல் இருக்கிறதே......மூர்க்க அண்ணனையும், மூளை கலங்கிய தந்தையையும் வைத்திருக்கும் நான் என்ன விதத்தில் உபகாரம் செய்ய முடியும்? என்னிதயத்தை எங்ஙனம் பிய்த்துக் கொடுப்பேன்? ஹா!...பகவான்!...பகவான்!''... என்று தனக்குள் மிகுந்த சோகத்துடன் ஒன்றுமே தோன்றாமல் பித்துப் பிடித்து விட்டவள் போலாகி விட்டாள்.

நாட்கள் ஒன்றிரண்டாகச் சென்றுகொண்டே இருக்கின்றன. அவள் தன் மனத்துடன் தானே வெகுவாகப் போராடிப் போராடி யுத்தம் செய்தும், அபலையான அவள் என்ன முடிவுக்கு வரமுடியும்! குழந்தைகளின் பரிதாபமும், தமக்கையின் பாசமும் அவளைச் சுற்றிக் கொண்டு விட்டதால் அவளால் அதை விலக்கவே முடியவில்லை. கடைசியில் ஒருவிதமான தீர்மானத்துக்கு வந்து துணிந்து விட்டாள்.

தன்னை யார் எவ்விதம் திட்டிய போதிலும் அதை லக்ஷ்யம் செய்யாது தன் தமக்கையின் வீட்டிற்குச் சென்று பார்த்து விட்டே வருவதென்று முடிவு கட்டிக் கொண்டாள். பழய காலந் தொட்டு இருக்கும் அவர்கள் வீட்டு மோட்டார் ஓட்டியை நோக்கி "தணிகாசலம்! நான் கூறப் போகும் விஷயம் உனக்கே மிக்க வியப்பாக விருக்கும். இருப்பினும் நீயும் மக்கள் மனிதரோடு பிறந்தவன்; பத்துக் குழந்தை குட்டிகளைப் பெற்றவன்; ஆகையினால் அந்த உணர்ச்சிகள் உனக்கு நன்றாகத் தெரியும்.

நம் வீட்டு பாரதத்தைப்போல் உலகத்தில் எங்கும் பார்த்தும் இருக்கமாட்டாய்; கேட்டும் இருக்கமாட்டாய். அவைகளை இனி சிந்திப்பதில் பயனில்லை. (கிருஷ்ணகுமாரியின் தற்கால நிலைமையைக் கூறி) இப்படியாகி விட்டதாம். இத்தனைக்கும் காரணம் நம்ம வீட்

டார் தான் என்றும் கூறவேண்டுமா! இன்னிலைமையிலும் கூட நான் கவனிக்காமல் இருப்பதென்றால் என் மனம் இடங்கொடுக்கவே இல்லை. அவர்களுடைய நிலைமையை அறியாது முன்னர் நானும் ஏதோ ஒரு விதமாகவே இருந்து விட்டேன். இப்போது விஷயம் தெரிந்ததும் என்னால் அந்த சங்கடத்தைத் தாங்க முடியவில்லை. உடன் பிறந்த ஒரு பிறப்பின் ஆபத்திலும் உதவாத பெண் ஜென்மமும் ஒரு ஜென்மமா வென்று ஏங்குகிறது.

தணிகாசலம்!......நான் இன்று கிருஷ்ணகுமாரியை எப்படியும் பார்த்துத்தான் தீருவேன். இதனால் என்னையும் தள்ளி விடட்டும். நான் இனி இந்த அக்ரமத்திற்குட்பட்டு வருந்த மாட்டேன். இங்கிருந்து அவர்களின் கிராமம்-எத்தனை மைல்கள் இருக்கும்? எவ்வளவு பெட்ரோல் வேண்டும்? அதைக் கூறு'' என்றாள்.

இவளுடைய தயாள குணத்தழகையும், கரை கடந்த வாஞ்சையையும் கண்டு தணிகாசலம் உண்மையில் உள்ளம் பூரித்தான். இது கால பரியந்தம் வஸந்தகுமாரியும் அண்ணனின் கொள்கையை அனுசரிப்பவள்தானோ, என்னவோ என்று எண்ணி இருந்த தணிகாசலத்திற்கு இது பெரும் வியப்பைக் கொடுத்தது. அவன் அபாரமான சந்தோஷத்துடன் ''தாயே! சின்னம்மா! ஒங்களுடைய இந்த உத்தமமான உயர்ந்த குணத்தைக் காணக் காண எனக்கு சந்தோஷம் தாங்க வில்லை. இதுவரையில் நான் அவர்களுக்கு ஊழியக்காரனாக இருந்து வேலை செய்த போதிலும் அவர்கள் செய்து வந்த அக்ரமத்தைக் கண்டு சகிக்கவே முடியவில்லை.

''அம்மணி! நானும் பல தரத்தில் சின்ன எஜமானுக்கு சொல்லிப் பார்த்தேன். அதனால் என் சம்பளத்தைக்குறைத்து விடுவதாயும், வேலையையே விட்டு விரட்டி விடுவதாயும் சொல்லி விட்டார். நான் பிள்ளை குட்டிக்காரன். என் பொழப்பு போய்விட்டால் காலம் படுகிற பாட்டில் நான் என்ன செய்ய முடியும்? வினை விதைத்தவன் வினையை அறுக்கிறான்...நம் தொழிலை நாம் செய்வோம் என்று பேசாதிருந்து வருகிறேன். அந்த சாந்தமூர்த்தியின் காலை ஒடிக்கச் செய்த மகா பாபம் ஒங்க அண்ணாவுக்குத்தான்

சாரும். அவரும் குடித்துவிட்டு சோதாக்களுடன் சோதா வாகச் சென்று மறைந்திருந்து இக்காரியத்தைச் செய்து விட்டதை பிறகே நான் அறிந்தேன். என்ன செய்வது?......

அம்மா!......நீங்க ப்ரியப்பட்டபடியே நான் செய்ய காத்துக் கொண்டிருக்கேன் அந்த க்ராமம் சுமார் 25......30......மைல். தான் இருக்கும் என்று எண்ணுகிறேன். இன்னிக்கெல்லாம் ஆனல் போக வர சின்னகாருக்கு 3......அல்லது. 4 காலன் பெட்ரோல் தான் ஆகும். பரவா இல்லே. இப்போது நிரப்பிவிடுகிறேன். நீங்க எப்ப சொன்னலும் நாம் தயாராக கிளம்பிவிடலாம்'' என்முன்.

வஸந்தகுமாரி கட்டு மீறிய சந்தோஷத்துடன் "சரி......... தணிகாசலம்! இன்னும் கூட சில காலன் பெட்ரோல் நிறைத்துக் கொள்ளு. டவுனுக்குச் சென்று பழங்கள்' முதலியன வாங்கிக் கொண்டு போவோம். என்னுடைய சினேகிதையின் வீட்டுக்குப் போவதாகச் சொல்லிவிட்டு வருகிறேன் நீயும் அப்படியே நடிக்க வேண்டும் தெரியுமா? இப்போது தந்தையும், தமையனும், யாவும் நீயேதான். உன்னேயே நம்பி, உன் துணையையே தைரியமாகக் கொண்டு நான் துணிந்து இக்காரியம் செய்யத் தீர்மானித்து விட் டேன்; ஜாக்ரதை.'' என்முள்.

தணிகாசலம் இயற்கையிலேயே மிகவும் நல்ல சுபாவத்தை உடையவன்; ஆகையினல் குழந்தை முதல் பழக்கமுள்ள வஸந்த குமாரிக்குப் பிதாவென்றும் கூறிக் கொள்ளக் கூடிய வயது முதிர்ந்தவன்; ஆதலால் அவன் வஸந்தகுமாரியின் வார்த்தையைக் கேட்டதும் "அம்மணீ! தாங்கள் சற்றும் பயப்படவேண்டாம்...... என்னல் எவ்விதமான கஷ்டமும் உங்களுக்கு நேராமல் நான் பார்த் துக் கொள்கிறேன். என் மகள் வள்ளியம்மாளும் நீங்களும் ஒரே நாளில் பிறந்தவர்கள். ஆகையால் உங்களேயும் நான் என் குழந்தை என்றே எண்ணித் தூக்கித் திரிந்தேன். என் மனேவியும் பால் கொடுத்து உங்களே வளர்த்தாள். ஆகையால் எந்த விதத்திலும் இந்த வீட்டில் மற்ற எல்லோரையும் காட்டிலும் தங்களிடம் அதிக ப்ரீதி யும் சுதந்திரமும் உண்டு என்பதை மகாலக்ஷ்மி போன்று விளங்கிய

பெரியம்மாளுக்குத் தெரியும். என்னை அந்தம்மாள் ஓர் வேலைக்காரனாகவே எண்ணமாட்டார்கள். கூடப் பிறந்தவனைப் போன்றும் வயிற்றில் பிறந்தவர்களைப் போன்றும் எண்ணி எந்த;ஒரு பண்டமும் எனக்குக் கொடுக்காமல் இருக்க மாட்டார்கள்.

'தணிகாசலம்!...சாப்பிட்டாயடா'......என்று அந்தம்மாள் கேட்பதுபோலவே இன்னும் தோன்றுகிறது. ஊம். எல்லாம் ஒரு காலம். இன்னிக்கு நேத்திக்கி இல்லெ. நான் இந்த வீட்டுக்கு வேலைக்கு வந்து 30 வருடம் ஆய்விட்டது. முதலில் சாதாரண வேலைக்காரனாகத்தான் வந்தேன். ஓங்கம்மாளின் தயவினால் நான் மோட்டார் ஓட்டக் கற்றுக் கொண்டு அன்று முதல் இதே இடத்தில் இதே தொழில் செய்து வருகிறேன். நான் ஒரு போதும் காட்டிக் கொடுக்க மாட்டேன். என்னை சத்தியமாக நம்புங்கள்.'' என்று வெகு அன்போடு, பழங்காலத்துக் கதைகளை எல்லாம் கூறினான்.

வஸந்தகுமாரி பெட்ரோலுக்காக 10 ரூபாய் நோட்டைக் கொடுத்து விட்டு 10 மணிக்கெல்லாம் தயாராக வந்து விடு'' என்று கூறி விட்டுச் சென்று தன் வேலைகளைக் கவனித்துக் கொண்டு அண்ணனிடமும் மன்னியிடமும், தான் தன் சிநேகிதையின் வீட்டுக்குச் சென்று வருவதாகக் கூறி விட்டுப் புறப்பட்டு விட்டாள். தணிகாசலமும் தயாராக விருந்தான். ஈச்வரோ ரக்ஷது என்ற தைரியத்தில் கிளம்பிவிட்டாளே யன்றி மனத்தில் திக்கு திக்கு என்று பயம் அடித்துக் கொள்கிறது. அங்கு சென்றால் குடிகாரன், சோதா! என்று கூறப்படும் சாந்தமூர்த்தி என்ன திட்டுவானோ! காலையும் உடைத்து விட்ட ஆத்திரத்தில் என்ன செய்வானோ என்ற பலவிதமான எண்ணத்துடன் குழம்பியபடியே இருக்கிறாள். காரும் வேகமாகப் பறக்கிறது......இத்தகைய துணிபுக்குக் கடவுள் எத்தகைய முடிவைக் கொடுப்பாரோ யாரறிந்தார்கள்?

---

## 13-வது அதிகாரம்

### சதிகாரச் சூழ்ச்சிகள்—அதிசய ப்ரவேசம்

கிருஷ்ணகுமாரியின் நாய்க்கடி உபத்திரவம் நாளேக்கு நாள் அதிகரித்து விட்டது. இதற்குத் தக்க பெரிய வைத்தியம் செய்வதற்குக் கையில் பணமில்லே. எத்தனேயோ சாதாரண வைத்தியங்கள் செய்தும் பல னில்லாது, நோய் அப்படியே அதிகரித்துக் கொண்டு வந்ததால் அவளுடைய மனக்கவலேயும் அதிகரித்து நாளடைவில் ஓர் விதமான வெறுப்பும் உண்டாகி விட்டது. நாம் ஆத்திரப் பட்டு இவனே மணந்ததனுலன்றே நம் கதி......நம் வாழ்க்கையே இவ்விதம் முடிந் தது. நாம் நம்மைக் காதலித்த ப்ரகாசை மணந்து கொண்டிருந்தால் எத்தனேயோ உயர்வாயும் கவுரவமாயும் சந்தோஷமாயும் இருந் திருக்கலாமே......வாழ்வின் தாழ்விற்கே அக்காலே அத்தகைய புத்தி யுண்டாகியது.

ஊம்......இனி எதை எண்ணிப் பயன் யாது? எல்லாம் பாழாகி விட்டது. இனி நினேப்பதுவும் மகா பாதகம்'' என்று தனக்குள் எண்ணிப் பெருமூச்சு விடுவாள். இந்த எண்ணத்தின் வேகத்தால் அவள் சாந்தமூர்த்தியுடன் அதிகம் பேசாமலும் ஒரு மாதிரியாக இருக்கவும் தலேப் பட்டாள். தான் நோய் குணமாகிப் பிழைத்தாலும், இனி நொண்டியின் மனேவி என்றல்லவா தன்னேக் காண்போர் கூறுவார்கள் அந்த அவமானத்துடன் வாழ்வதை விட இறந்து விடுவதே மேல் என்று தோன்றியது.

தன்னுலன்றே அவன் நிலேமை இம்மாதிரியாகி விட்டது என்று விசனப்படுவது போக அதை வித்யாசமாக எண்ணும்படி யான நிலேமை ஏற்பட்டு விட்டதும் உலக விநோதங்களில் ஒன் றல்லவா! இவ்வெண்ணம் உள்ளுக்குள் வளர வளர அவளுடைய மனேபாவமே பவலமாக மாறிக் கொண்டே வந்து அதன் முடிவாக தானே ப்ரகாசத்தை வரவழைத்துத் தனக்கு உதவி யளிக்கும்படிக் கேட்கலாமா என்ற நிலேமைக்கு வந்தது.

ஆனுல் உடனே, அப்படிச் செய்தால் அது தன் கணவனின் மனக் கசப்பையும் விரோதத்தையும் அதிகரிக்கச் செய்து விடுமே...

என்ற பயமும் தோன்றியதால், அவள் மனதிற்குள்ளேயே பல வித மான யோசனையுடன் குழம்பிக் கிடந்தாள். அக்காலையில் தான் இந்த நோட்டுக்களின் விவகாரம் ஒன்று புதிதாக வந்து விட்டதால் இது எப்படிப்போய் எப்படி முடியுமோ! வென்ற குழப்பம் உண் டாகி விட்டது.

சாந்தமூர்த்தியின் கால்கள் நடக்கக்கூடிய நிலைமைக்கு வருமா என்று எதிர் பார்த்துக்கொண்டே பின்னும் கட்டு கட்டி வருவதில் குறைவில்லை. ஆனால் குண மென்னவோ காணவில்லை. இதே ஏக் கம் அவனைப் பலமாகச் சுற்றிக் கொண்டு இராப் பகல் வதைக்க வாரம்பித்து விட்டது. இவன் நொண்டியாகி ஊரோடு உட்கார்ந்து விட்டதால் இவனுடைய பிர்காவின் வேலையைக் கவனிக்க சாத்திய மில்லாது போய்விடினும் அடுத்த பிர்காவின் அதிகாரியையே இதை யும் சற்று கவனித்துக் கொள்ளும்படிக் கேட்டிருந்தபடியே அவர் கவனித்து வருகிறார்.

இவனுடைய எதிரியாகிய குலசேகரன் மழை விட்டும் தூவா னம் விடவில்லை என்பது போல் தேர்தல் முடிவு ஏற்பட்டும் தன் விரோதத்திற்கு ஓர் முடிவு கொடுக்காமல் டிவிஷனில் உள்ள குப் பைக்காரர்களுக்கு லஞ்சத்தைக் கொடுத்தும், கள்ளு முதலியன நிறைய வாங்கி ஊற்றியும் அந்த டிவிஷன் வேலையை மோசமாகச் செய்யும்படியும், சாக்கடைகள் தெருக்கள், கக்கூஸ்கள், இவைகளை சரிவர சுத்தம் செய்யாமல் அம்பக் வேலை செய்யும் படிக்கும் தூண்டி விட்டு "இம்மாதிரி செய்தால் ஜனங்களுக்கு அசௌகரியங் கள் அதிகமாக உண்டாகும். சாக்கடையும் கக்கூஸும் அசுத்த மாகி விட்டால் நாத்தம் சகிக்காமல் கொசுக்களும் மற்ற பூச்சிகளும் வியாதியும் உண்டாகி விடும். இதை ஜனங்கள் சகிக்க மாட்டார்கள். அப்போது மேல் அதிகாரிகளுக்கு இந்த டிவிஷன் கவுன்சிலர் சரி யாக வேலை செய்ய வில்லை என்று குற்றங்கண்டு எழுதுவார்கள். அந்த மனிதன் என்னவோ நொண்டியாகி விட்டான். இனிமேல் வேலைக்கு லாயக்கு இல்லை. அதிகாரிகளே அவனை ராஜீநாமா செய்யச் செய்துவிடுவார்கள். அதன் பிறகு நானே போட்டியின்றி வந்து விடுவேன்...

தோழர்களே!......நான் வந்து விட்டால் என்ன நடக்கும் தெரியுமோன்னா......முதலில் உங்களுடைய சம்பளங்களை உயர்த்த வும், பணக்காரர்களிடம் வரி அதிகம் வசூலித்து அதைச் சரிப் படுத்தி விடுவேன். தெரிந்ததா! நீங்கள் இம்மாதிரி செய்தால்தான் காரியம் சித்தியாகும். இல்லா விட்டால் இப்படியே தான் அழுது கொண்டிருக்க வேண்டும்" என்று கலகம் செய்துத் தூண்டி தூபம் போட்டு விட்டான்.

டிவிஷனில் உள்ள சிலரைக் கைக்குள் போட்டுக் கொண்டு மேலதிகாரிகளுக்குக் குற்றச்சாட்டுகள் சாந்தமூர்த்தியின்மீது எழுதும்படிக் கலகம் செய்ததோடு 'நான் கவுன்ஸிலராக வந்தால் உங்களுக்கு வரியைக் குறைப்பேன்; இன்னும் குழாய் முதலிய வசதி களைச் செய்து கொடுப்பேன். ஜனங்களுக்கு வேண்டியவர்களுக்கு நல்ல வேலையையும் செய்து வைப்பேன்'' என்றெல்லாம் நன்றாக வேப்பிலை யடித்து விட்டான்.

இந்த தூபத்திற்கும் சில பிசாசுகள் ஆடத் தொடங்கி விட்டன. அதிகாரிகளுக்கும் சாந்தமூர்த்திக்கும் கடிதங்கள் கண்டபடி பறக்க வாரம்பித்தன. வேலைக்காரர்கள் அட்டூழியம் செய்ய வாரம் பித்தார்கள். சாக்கடை, கக்கூஸ், முதலிய நாற்றங்களும் அதனால் கொசுவும் பூச்சிகளும் சொல்லத்திறமில்லை. இரவு பகல் ஜனங்க ளுக்கு தூக்கமில்லாது பெருத்த சங்கடங்கள் உண்டாகி விட்டன. குழாய்த் தண்ணீர் விடும் மனிதனையும் பிடித்து லஞ்சம் கொடுத்து அதற்கும் குலசேகரன் வழி செய்து விட்டதால் குழாய்த் தண்ணீர் சரியாக விடுவதில்லை.

குழாயையே நம்பியுள்ள ஜனங்களுக்கு தண்ணீர் கஷ்டம் சொல்லத் திறமில்லை. குழாய் இலாக்காவைச் சேர்ந்தவர்களைக் கேட்டால் குழாய் ரிப்பேர்......தண்ணீர் பஞ்சம் முதலிய சாக்குகள் சொல்லி வந்தார்கள். இதனால் மக்களிடையே பரபரப்பும் தவிப்பும் உண்டாகிக் கடிதங்கள் பின்னும் பலமாகப் பறக்க வாரம் பித்தன. மேலதிகாரிகளும் சாந்தமூர்த்திக்கு எழுதத் தொடங்கி விட்டார்கள். இக்கடிதங்களை எல்லாம் படித்துப் பார்த்து மனம் நொந்து போய் "நாம் என்ன செய்யலாம்? இதற்கு எவ்விதம் விமோசனம் செய்யக் கூடும்?'' என்ற ஏக்கம் பிடித்து விட்டது. மனத்தின் ஆறுதலுக்குப் பத்திரிகை யொன்று தான் சற்று துணை யாக இருந்தது.

அன்னிலைமையில் இருக்கும்போது ஒரு தினம் அந்த குக்ரா மத்தில் ஒரு மோட்டார்கார் வரும் சப்தத்தைக் கேட்டு குழந் தைகள் மிகவும் சந்தோஷங் கொண்டு ஓடி வந்தார்கள். சாந்த மூர்த்தி வழக்கம்போல் சாய்வான நாற்காலியில் உட்கார்ந்து பத் திரிகை யொன்று படித்துக் கொண்டிருந்தான். அவனுடைய முகம் தன்னை மீறிய சோகத்தையே காட்டியது.

பத்திரிகையில் வெளியாகி இருந்த ஒரு சிறு கதையை அவன் கவனத்தை முற்றும் கவர்ந்து இழுத்துச் சென்றது. அச்சமயம் அங்கு வந்த மோட்டாரின் சப்தத்தைக் கேட்ட உடனே சாந்த மூர்த்தியே வியப்புற்று "இந்த குக்ராமத்தில் மோட்டாருடன் வருவதற்கு யார் இருக்கிறார்கள்? தாசில்தார் முதலிய உத்யோகஸ்

தர்கள் கூட வருவதாக ஒரு தகவலும் தெரியவில்லையே. யாராக விருக்கும்?'' என்று சிந்தித்தவாறு கவனித்தாள்.

குழந்தைகள் எல்லாம் மோட்டார்...மோட்டார்......என்று கூவிக்கொண்டே ஓடினர்கள். காரும் மெதுவாகவே வந்து தென்னந் தோப்பின் பாதையோடு சென்று இக் குடிசை வீட்டிற்குச் சற்று தூரத்தில் நின்றது. ஒவ்வொரு குழந்தையும் ஒரு மரத்தடியில் நின்று காரையே வெகு ஆவலுடன் நோக்கியது.

காரிலிருந்து முதலில் பெரிய பழக்கூடை யொன்று இறங்கியது. அடுத்த நிமிடம் சாந்தமூர்த்தியும் மற்றையோரும் வியக்கத்தக்க முறையில் சற்று மெலிந்த தேகத்துடனும், விசனம் நிறைந்து வாடிய முகத்துடனும் சிவப்ரகாசம் காரிலிருந்து ஒரு சிறு பெட்டியைத் தூக்கிக்கொண்டு இறங்கினன்.

இதைப் பார்த்த உடனே பெரிய குழந்தையாகிய லதா அடக்க முடியாத சந்தோஷத்துடன் ஓட்டமாக ஓடியவாறு "ஹா!... அதோ சைக்கில் மாமா...சைக்கில் மாமா...வாங்கோ...வாங்கோ... சைக்கில் ஏன் வரல்லே. கார் எப்போ வாங்கினீங்கோ. அம்மாக்கு உடம்பு சரியில்லே மாமா...ஒங்களெ பாத்து எத்தனையோ நாளாயுட்டுது மாமா...என் குட்டித் தம்பி இருந்தான் பாருங்கோ ...அவனே நீங்க பாத்தே இல்லே. அவன் செத்துப்போய்ட்டான் மாமா...எங்கப்பாவுக்கு கால் உடைஞ்சுட்டுது மாமா!'' என்று குழந்தைகளின் இயற்கையான கபடமற்ற தொனியில் தடதட வென்று கூறியவாறு ப்ரகாசத்தின் காலைக் கட்டிக்கொண்டாள்.

ப்ரகாசமும் லதாவை ஒரு கையினல் அணைத்து முத்த மிட்டுப் பின் "கண்ணே லதா!'' என்றான். அதே நிமிடம் சாந்த மூர்த்தி நாற்காலியில் உட்கார்ந்து தன்னைக் கவனிப்பதையும் அவன் பக்கத்தில் ஊன்று கோல்கள் வைத்திருப்பதையும் கண்டு விட்டான். சாந்தமூர்த்தியும் இந்த எதிர்பாராத திடும் ப்ரவேசத் தைப் பார்த்த உடனே கட்டு மீறிய வியப்பும், திகைப்பும், ஒரு வித மான மன வெறுப்பும் கொண்டு அவனையே உற்று நோக்கினன். இருவர் விழிகளும் ஏக காலத்தில் சந்தித்தன. அடுத்த விநாடி இருவர் சிரங்களும் கீழே சாய்ந்தன. ப்ரகாசத்தின் கண்கள் ப்ரகாசத்தை இழந்தன. சாந்தமூர்த்தியின் கண்கள் சாந்தத்தை இழந்தன.

அதே சமயம் உள்ளே கட்டிலில் படுத்திருக்கும் கிருஷ்ண குமாரிக்கு லதா கூறிய வார்த்தைகள் காதில் விழுந்தன. அபாரமான வியப்பும் ஒருவிதமான பயமும் கிலியுங் கொண்டு நடுங்கிவிட்டாள். திடீரென்று ப்ரகாசம் வருவதற்குக் காரணம் என்னவென்றும் தோன்றாது அப்படியே திக்ப்ரமை பிடித்துப் படுத்துவிட்டாள்.

---

PRINTED AT TATA PRESS & PUBLISHED BY
V. M. PARTHASARATHY, MADRAS.

# வெளிவந்துவிட்டது.

உன்னத புராணப் பேசும் படம்.

கோவை பிரிமியர் ஸினிடோன் கம்பெனியார்

தயாரித்த

# சதி அனுசூயா

(தமிழ்)

டைரெக்ஷன்

பிரேம் சேத்ன

பாட்டுகள், சம்பாஷணை :

எல். நஞ்சப்ப செட்டியார்

நடிகர்கள் :

ஜி. என். பாலசுப்ரமண்யம், B. A. (Hons.)

மிஸ். டி. வி. ஞானலக்ஷ்மி

,, ஆர். சகுந்தாபாய்

காமெடியன்கள் :

எம். எஸ். முருகேசன்

டி. எஸ். பாலையா

மிஸ். பி. ஆர். மங்களம்

மிஸ். தனலக்ஷ்மி

மிஸ். பால சுசீலா

எமது அடுத்த படங்கள் :—

**ஸ்ரீ கந்த லீலா** (தயாராகி வருகிறது)

**கள்வர் தலைவன்** (ராவ்பகதூர் பி. சம்பந்த முதலியார் எழுதியது)

படம் வேண்டுவோர் எழுதுக :—

**எம். ஏ. எஸ். செல்லம் அண்டு கம்பெனி,**

பிரிமியர் ஸினிடோன் லிமிடெட்,

கோயமுத்தூர்.

Jaganmohini Vol. XIV—No 3 Regd. No. M. 2210.




வலிகள்

சுளுக்குகள்

Strains

அனாவசியமாக வலியினால், அவஸ்தைப்படாதீர்கள். சம்பந்தப்பட்ட இடத்தில் அம்ருதாஞ்சனத்தை தேய்த்து, அதன் உஷ்ணம் நரம்புக்குள் நுழைந்து வலியைச் சமனப்படுத்துவதைக் கவனியுங்கள்.




சீக்கிரத்தில் அநுகூலம் உண்டாக்குவதில் அம்ருதாஞ்சனத்திற்கு இணையானது வேறெதுவும் இல்லை.

# அம்ருதாஞ்சன்

எல்லா வலிகளையும், சுளுக்குகளையும் சொஸ்தப்படுத்தும்.